வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No.: P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu
வார மலர்
Email : news@eelanadu.lk மலர் : 07 01.02.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 32 பக்கங்கள் : 16



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# பதவி ஆசையற்றவர் மாவை சலுகைக்கு விலை போகாதவர்

## சிலை திறப்பு விழாவில் வடக்கு ஆளுநர் புகழாரம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 01

**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பதவி ஆசையற்றவர், சலுகைகளுக்கு விலைபோகாதவர். தனக்கென எதனையும் எதிர்பார்க்காது, தமிழ் மக்களின் உரிமைக்காகப் பல ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த மிகச் சிறந்ததொரு மனிதரை நாம் இழந்திருக்கிறோம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**


இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் முன்னாள் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் முன்னாள் தலைவருமான காலஞ்சென்ற மாவை. சேனாதிராசாவின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, மாவிட்டபுரத்தில் அமைக்கப்பட்ட அன்னாரது திருவுருவச் சிலை வடக்கு மாகாண ஆளுநரால் நேற்று சனிக்கிழமை காலை திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் நடைபெற்ற நினைவுப்பேருரை மற்றும் மேடை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து

15



## பெருந்தலைவர் மாவையின் திருவுருவச் சிலை திறப்பு!



யாழ்ப்பாணம், பெப். 01

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மறைந்த பெருந்தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவின் திருவுருவச் சிலை திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

நேற்று காலை கே.கே.எஸ். வீதி மாவிட்டபுரத்தில், காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இந்தத் திருவுருவச் சிலை திறந்து

15

## முல்லைத்தீவில் நில அதிர்வு

கொழும்பு, பெப். 01

முல்லைத்தீவு கடற்பரப்பில் நேற்று பிற்பகல் சிறியளவிலான நில அதிர்வு ஒன்று பதிவாகியுள்ளது.

திருகோணமலை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் இதனை உறுதிப்படுத்தினார்.

இதன்படி, இந்த நில அதிர்வானது ரிச்டர் அளவுகோளில் 3.6 அளவில் பதிவாகியுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் 3.49 மணியளவில் இந்த

15

## தையிட்டியில் போராட்டம்!



யாழ்ப்பாணம், பெப். 01

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் நேற்று ஆரம்பமானது. நேற்று மாலை 4 மணிக்கு ஆரம்பமான குறித்த போராட்டம் மாலை 6

15

## சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் 8 பேருக்கு உடனடி இடமாற்றம்

கொழும்பு, பெப். 01

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன், உடன் அமுலுக்கு வரும் வகையில் 08 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதில் இரண்டு பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், ஐந்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் ஒரு பொலிஸ் அத்தியட்சகர் உள்ளடங்குவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஈ. எம்.ஜி.ஜே. சேரம் காலி பிரிவிலிருந்து,

15

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழில் 'நீதிக்கான சாட்சி'

யாழ்ப்பாணம், பெப். 01

1996 தொடக்கம் 2009 வரையான காலப் பகுதிகளில் கைது செய்யப்பட்டு சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்று யாழ். சிவகுரு ஆதீனத்தில் 'நீதிக்கான சாட்சி' என்ற நூதன போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில், அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்

15



## சீனா - இலங்கை இடையே புதிய விமான சேவை

கொழும்பு, பெப். 01

சீனாவின் பீஜிங் கப்பிற்றல் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான விமானம் ஒன்று, நேற்று பிற்பகல் பீஜிங்கின் டெக்ஸிங் சர்வதேச விமான நிலையத்திலிருந்து கட்டுநாயக்கா விமான

15

## அரச வைத்தியர்களின் போராட்டம் நாளை முதல் தீவிரப்படுத்தப்படும்!

கொழும்பு, பெப். 01

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முன்னெடுத்து வரும் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகளை நாளை முதல் மேலும் தீவிரப்படுத்த தீர்மானித்துள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, கடந்த 26ஆம் திகதி முதல் நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளை உள்ளடக்கிய வகையில் இந்த தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் கூடிய சங்கத்தின் மத்திய செயற்குழு, தமது பிரச்னைகளுக்கு தீர்வு காண சுகாதார அமைச்சருக்கு 48 மணி நேர அவகாசம் வழங்கியிருந்தது.

எனினும், அந்த காலக்கெடு முடிந்த பின்னரும்

15

## சிஸ்டத்தை குழப்பிவிட்டது அரசு

### நாமல் ராஜபக்ஷ எம். பி. குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 01

'சிஸ்டம் சேஞ்ச்' எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் இருக்கின்ற சிஸ்டத்தையும் குழப்பியுள்ளனர். தமது இயலாமையை மூடிமறைக்கவே எம்மை இலக்கு வைக்கின்றனர் - இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

"இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு அங்குள்ள பல்கலைக்கழகமொன்றில்

15

## புதிதாக 10 பெய்லி பாலங்களை இலங்கைக்கு அனுப்பிய இந்தியா

கொழும்பு, பெப். 01

டித்வா புயலினால் ஏற்பட்ட அனர்த்தத்தின் போது சேதமடைந்த பாலங்களைப் புனரமைக்கும் நோக்கில், இந்தியா மேலும் 10 பெய்லி பாலங்களை நேற்று இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் தனது எக்ஸ்

15

## கணக்காய்வாளர் நியமனம்; இறுதி தீர்மானம் ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 01

கணக்காய்வாளர் நாயகம் பதவிக்காக ஜனாதிபதியால் அரசியலமைப்பு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய பரிந்துரை குறித்து தற்போது விரிவாக ஆராயப்பட்டு வருவதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க இவ்வாறு

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீர் பணக்காரர்களின் பட்டியலை நான் தரவா?

## வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் பவானந்தராஜா எம். பி. கேள்வி

யாழ்ப்பாணம், பெப். 01

வலி. மேற்கில் திடீர் பணக்காரர்கள் எல்லாம் இருக்கிறார்கள். எங்களுக்குத் தெரியும். உங்களுக்குத் தெரியுமா? பட்டியல் தரவா? என்று பாராளுமன்ற உறுப்பினரும் வலி. மேற்கு அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான சிறீ பவானந்தராஜா வட்டுக்கோட்டை பொலிஸாரை பார்த்து கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற வலி. மேற்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அவர்கள் எப்படி திடீரென பணக்காரர்கள் ஆனார்கள், பொலிஸார் எவ்வாறு அவர்களுடன் நல்லுறவில் இருக்கின்றனர் என மக்கள் காணொலி ஆதாரத்துடன் எமக்குத் தந்துள்ளனர். திடீர் பணக்காரர்களுக்கு எதிராக நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். சங்கானை பிரதேச செயலர் பிரிவிலும் திடீர் பணக்காரர்கள் உள்ளனர் என்று எமக்கும் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே, அவ்வாறானவர்கள் குறித்தான தகவல்களை மேலும் எங்களுக்கு வழங்குங்கள். எங்களுக்கு கிடைத்த தகவல்களை நாங்கள் உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளோம். அவர்கள் இது குறித்து நடவடிக்கை எடுப்பார்கள்.

பொலிஸாருக்கு முகவர்கள் இருக்கின்றனர். நாங்கள் அது குறித்து அவதானித்துக் கொண்டுதான் இருக்கின்றோம்"- என்றார்.

(எ)

# உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடும் பட்டதாரிகளை பார்வையிட்டார் சஜித்




கொழும்பு, பெப். 01

இலங்கை பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தினரால் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஜனவரி 26 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை பார்வையிடுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுச் சனிக்கிழமை காலை சென்றார்.

தமக்கு முறையான வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்ற பிரதான கோரிக்கையை முன்வைத்து, "நாங்கள் சாவோமே தவிர இங்கிருந்து செல்ல மாட்டோம்" என்ற உறுதியான வாசகங்களுடன் பட்டதாரிகள் இந்த போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்த போராட்டத்தை பார்வையிடுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சென்றார்.

அப்போது, உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த இருவரின் உடல்நிலை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(எ)

# நல்லூர் கந்தசுவாமி கோவிலின் நெற்புதிர் அறுவடை நிகழ்வு




யாழ்ப்பாணம், பெப். 01

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் நெற்புதிர் அறுவடை நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது.

தைப்பூச தினத்துக்கு முதல் நாள் கொண்டாடப்படும் 'புதிர் தினம்' எனும் இந்த பாரம்பரிய நிகழ்வில் தேவஸ்தான அறங்காவலரும் சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய தேவஸ்தானத்துக்கு சொந்தமான மறவன்புலவில் உள்ள வயலுக்கு செல்வார்கள்.

அந்த வயலில் பூஜை வழிபாட்டுடன் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து நல்லூர் கந்தசுவாமிக்கு படையல் வைத்து பூஜைகள் செய்வது வழக்கம்.

இவ்வழிபாட்டு முறை நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் மரபாக - பண்பாட்டு விழாவாக பேணப்பட்டு வருகிறது.

இப்புதிர் விழா 292ஆவது ஆண்டாக இவ்வருடம் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# பணவீக்கம் அதிகரிப்பு

2025 டிசெம்பர் மாதம் 2.1 சதவீதமாக காணப்பட்ட பணவீக்கம் ஜனவரி மாதம் 2.3 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. இதேபோல் உணவு பணவீக்கம் கடந்த மாதம் 3.0 சதவீதமாக காணப்பட்ட நிலையில் 3. 3 சதவீதமாக உயர்ந்துள்ளது.

தொகைமதிப்பு - புள்ளிவிவர திணைக்களம் கொழும்பு நகர் பிரதேசங்களின் மாதாந்த நுகர்வோர் பணவீக்கத்தை முன்னிலைப்படுத்தி, 2025 டிசெம்பர் மாதத்துக்கான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் குறிகாட்டியுடன் 2026 ஜனவரி மாதத்துக்கான பணவீக்கம் தொடர்பான விவரத்தை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய கடந்த டிசெம்பர் மாதம் 2.1 சதவீதமாக காணப்பட்ட முதன்மை பணவீக்கம் ஜனவரி மாதம் 2. 3 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.பானங்கள், புகையிலை என்பவற்றுக்கான பணவீக்கம் டிசெம்பரில் 4.9 சதவீதமாக இருந்தது. இது ஜனவரியில் 3.5 சதவீதமாக குறைவடைந்துள்ளது. வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய பொருட்களுக்கான பணவீக்கம் 1.6 சதவீதமாக உயர்ந்துள்ளது.

# மாணவிக்கு போதைப்பொருள் பாவனையாளர்கள் தொந்தரவு

## வட்டுக்கோட்டை பொலிஸார் அசண்டையீனம்

யாழ்ப்பாணம், பெப். 01

வீதியில் இருந்து போதைப்பொருள் பயன்படுத்தியவர்களால் உயர்தர வகுப்பு மாணவி ஒருவருக்கு தொந்தரவு செய்யப்பட்டது. இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கூறியும் அங்கு பணி புரியும் பொலிஸார் அசண்டையீனமாக செயல்பட்டதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று முன்தினம் ஒருங்கிணைப்பு குழு தலைவர் சிறீபவானந்தராஜா எம். பி. தலைமையில் நடைபெற்றது. இதன்போது, சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதி ஒருவரால் இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிலர் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதி ஒன்றில் வீதியில் இருந்து போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டனர். இதன்போது தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டனர். சம்பவம் நடந்த பகுதிக்கு அருகாமையில் உள்ள வீட்டில் உயர்தர வகுப்பு மாணவி ஒருவர் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்.

இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு தெரியப்படுத்தியபோது பொலிஸாரை உடனடியாக அனுப்புவதாக அவர் கூறினார். பொலிஸார் நீண்ட நேரமாக வராத காரணத்தால் மீண்டும் பொறுப்பதிகாரிக்கு தெரியப்படுத்தியவேளை அவர் வெளிக்களத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தரின் தொலைபேசி இலக்கத்தை வழங்கினார்.

நான் அந்த இலக்கத்துக்கு தொடர்புகொண்டு விடயத்தை கூறியவேளை "பொலிஸ் நிலையத்தில் சென்று முறைப்பாடு பதிவு செய்யுங்கள். அதன் பின்னரே வருவோம்" என்று கூறினர். நான் முறைப்பாடு செய்ய இது எனது தனிப்பட்ட பிரச்னை அல்ல. அப்படி முறைப்பாடு செய்தால் நாங்கள் தனிப்பட்ட ரீதியாக முரண்பாடுகளுக்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாக வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது. அத்துடன் முறைப்பாடு செய்த பின்னர் தான் பொலிஸார் வருவார்கள் என்றால் குற்றச்செயல் நிறைவடைந்த பின்னரே அவர்களால் வரமுடியும். அப்படி வந்து என்ன பயன்?- என்றார்.

பொலிஸ் அவசர பிரிவுக்கும் அழைப்பு மேற்கொண்டு சொன்னேன். அவர்களும், குறித்த இடத்துக்கு செல்லுமாறு வெளிக்களத்தில் கடமையில் இருந்த பொலிஸாருக்கு கூறினர். இருப்பினும் அவர்கள் வரவில்லை- என்றார்.

இதற்குப் பதிலளித்த வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் லியூறன், எமது பொலிஸ் நிலையத்தில் ஆட்கள் பற்றாக்குறை காணப்படுகிறது. இவர்கள் அழைப்பு மேற்கொள்ளும் போது நாங்கள் அராலி கிழக் கில் நின்றோம். அதனால் தான் போக முடியவில்லை - என்றார். (எ)

# இந்தியாவில் நடந்த கராத்தே, சிலம்ப போட்டிகளில் இலங்கைக்கு 26 தங்கம், 4 வெள்ளி கிண்ணங்கள்!



யாழ்ப்பாணம், பெப். 01

இந்தியாவில் நடந்த சர்வதேச கராத்தே, சிலம்பம் போட்டிகளில் யாழ்ப்பாணத்தின் சர்வதேச சிவலீமன் சிலம்பம் மற்றும் பாபு இஷின்ரியூட் கராத்தே பாடசாலை 26 தங்கக் கிண்ணங்களையும் 4 வெள்ளிக் கிண்ணங்களையும் கைப்பற்றியுள்ளது.

இந்தியா, இலங்கை, மலேசியா, டுபாய், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து 1500இற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்ற இந்தப் போட்டி தமிழ்நாட்டின் கும்பகோணம், மதுரையில் கடந்த ஜனவரி 24, 25 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இதில், யசோதரன் தனுஷன் - 07 தங்கக் கிண்ணங்கள் பஸ்ரியன் ரஜீவ் - 05 தங்கக் கிண்ணங்கள், ரவீந்திரன் டிலக்சினி -03 தங்கக் கிண்ணங்கள், 01 வெள்ளி கிண்ணம், வினோதன் பகலவன் - 06 தங்கக் கிண்ணங்கள், 01 வெள்ளிக் கிண்ணம், சற்குணராஜா பிரவீன்- 05 தங்கக் கிண்ணங்கள் 02 வெள்ளிக் கிண்ணங்கள் என மொத்தமாக 26 தங்கக் கிண்ணங்களையும் மற்றும் 04 வெள்ளிக் கிண்ணங்களையும் கைப்பற்றினர்.

(02)

# கரையோர ரயில் சேவைகளில் தாமதம்

கொழும்பு, பெப். 01

கொழும்பு கோட்டை - வெள்ள வத்தை ரயில் நிலையங்களுக்கு இடையில் இன்றும் ரயில் சேவைகள் தாமதமாகும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

கோட்டை - வெள்ளவத்தை ரயில் நிலையங்களுக்கு இடையிலான மேல் மற்றும் கீழ் மார்க்கங்களில் இயக்கப்படும் ரயில்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, சமிக்ஞை கட்டமைப்பில் மேற்கொள்ளப்படவுள்ள அத்தியாவசிய மேம்படுத்தல் பணிகள் காரணமாக இந்தத் தாமதம் ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் காரணமாக நேற்றும் ரயில் சேவைகள் தாமதமாகின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களிடம் வாக்குமூலங்களை பெற்று விசாரணையை விரைவில் முடிக்க உத்தரவு

கொழும்பு, பெப். 01

சர்ச்சைக்குரிய கல்வித் தொகுதி தொடர்பில் பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியர்களிடமும் வாக்குமூலங்களை பெற்று, அது தொடர்பான விசாரணைகளை விரைவில் முடிக்குமாறு கங்கொடவில நீதிவான் ருவந்திகா மாரசிங்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டார்.

விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்துக்கு அறிவித்த போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் தரம் 6 ஆங்கிலப் பாடத் தொகுதியில், சிறுவர்களுக்குப் பொருத்தமற்ற இணையத்தளமொன்றின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் கங்கொடவில நீதிவான் நீதிமன்றத்தில் விடயங்களை அறிக்கையிட்டிருந்ததுடன், நீதிமன்றத்தின் அறிவிப்புக்கமைய விசாரணைகளின் முன்னேற்றத்தை அதன் அதிகாரிகள் நேற்று முன்தினமும் நீதிமன்றத்துக்கு அறிவித்தனர்.

வழக்கில் இடையீட்டு தரப்பு சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மந்தகதியில் முன்னெடுப்பதாக குற்றம்சாட்டினார்.

கல்வி அமைச்சர், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அனைவரும் பொறுப்புக் கூற வேண்டிய இந்தச் சம்பவத்தில், இரண்டு அதிகாரிகளின் சேவையை மட்டும் இடைநிறுத்தி இதனை ஒரு சாதாரண செயலாக காட்ட முனைவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், சர்ச்சைக்குரிய தொகுதியின் 51 மற்றும் 52 ஆம் பக்கங்களில் குறித்த இணையத்தளம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் அந்தப் பக்கங்கள் 47 மற்றும் 48 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

விசாரணை அதிகாரிகள் அந்தத் தொகுதியொன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து, சர்ச்சைக்குரிய இணையத்தளம் தொகுதியின் 47 மற்றும் 48 ஆம் பக்கங்களிலேயே குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் உள்ள தொகுதி, 2025 டிசெம்பர் 23 ஆம் திகதி அச்சிடப்பட்ட ஒன்று எனவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப் பயன்படுத்தப்பட்ட தொகுதி அதுவல்ல எனவும் வேறொரு தொகுதியையே அதிகாரிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் இடையீட்டு தரப்பு சட்டத்தரணிகள் மீண்டும் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த இரண்டு தொகுதிகளையும் சான்றுப் பொருட்களாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு இதன்போது நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பில் இரண்டு அதிகாரிகளின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது ஏன்? எனப் பின்னர் நீதிவான் அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த விசாரணை அதிகாரிகள், தொகுதியை தயாரித்த இரண்டு அதிகாரிகளே இவ்வாறு பணி இடைநிறுத்தப்பட்டுள்ளனர். கல்வி அமைச்சின் உள்ளக விசாரணையின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறினர்.

சர்ச்சைக்குரிய சம்பவத்தின் போது கடமை ரீதியான கவனக்குறைவு ஏற்பட்டுள்ளதா? அல்லது வேண்டுமென்றே செய்யப்பட்ட செயலா?

இதன் மூலம் பொதுச் சொத்து துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளதா? என்பது தொடர்பில், இந்தத் தொகுதி தொடர்பில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடமும் வாக்குமூலம் பெற்று விசாரணைகளை விரைவில் முடிக்குமாறு நீதிவான் அந்தச் சந்தர்ப்பத்தில் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அறிவித்தார்.

சம்பவம் தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் மீது சந்தேகம் நிலவுமாயின், அவரும் இதில் ஒரு சாட்சியாளராக இருக்க வேண்டும் எனவும் நீதிவான் கூறினார்.

அத்துடன், விசாரணைகளின் முன்னேற்றத்தை எதிர்வரும் பெப்ரவரி 20 ஆம் திகதி நீதிமன்றத்தில் அறிக்கையிடுமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (எ)

# தொழில்களை மீளக்கட்டியெழுப்ப தேவையான உதவி வழங்கப்படும்

கொழும்பு, பெப். 01

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட தொழில்களை மீளக்கட்டியெழுப்புவதற்குத் தேவையான உதவிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று தொழில்துறை பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகரத்தில் நடைபெற்ற கண்காட்சியொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட பிரதி அமைச்சர், இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்ட முழுமையான நஷ்டத்தை ஈடுசெய்வதற்கு அரசாங்கத்திடம் நேரடிப் பொறிமுறை எதுவும் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

வீழ்ச்சியடைந்த தொழிற்சாலைகளுக்கு கடன் வசதிகள் மற்றும் கடன் திருப்பிச் செலுத்த கால அவகாசம் உள்ளிட்ட பல் வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தொழிற்சாலைகளுக்காக தொழில்துறை அமைச்சு தலையிட்டுள்ளதுடன், குறிப்பாக சுமார் 200 பாரியளவிலான தொழிற்சாலைகளுடன் நெருக்கமாகச் செயல்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், ஏற்பட்ட நஷ்டத்தை முழுமையாக ஈடுசெய்யக்கூடிய பொறிமுறை இல்லாததால், காப்புறுதி நிறுவனங்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல், மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான இயந்திரங்களைப் பெற்றுக்கொடுக்கத் தலையிடுதல் போன்ற பணிகளைத் தொழில்துறை அமைச்சு முன்னெடுத்து வருவதாகவும் பிரதி அமைச்சர் கூறினார். (எ)

# தேங்காய் எண்ணெய் தொழிற்சாலையில் தீ

கொழும்பு, பெப். 01

பண்டாரகமை - களுத்துறை வீதியில் உள்ள தேங்காய் எண்ணெய் தொழிற்சாலை ஒன்றில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீ பரவல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 01. 15 மணியளவில் ஏற்பட்டுள்ளது.

ஹொரணை நகர சபை தீயணைப்புப் படையினர் இணைந்து தீ பரவலை கட்டுப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ பரவலால் ஏற்பட்ட சேதம் காரணமாக குறித்த தொழிற்சாலைக்கு சுமார் 20 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

எவ்வாறிருப்பினும், தீ பரவலின் போது எந்தவித உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தீ பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறிப்படவில்லை.

மேலதிக விசாரணைகளை பண்டாரகமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# போதைப்பொருட்களுடன் இளைஞன் ஒருவர் கைது!

அநுராதபுரம், பெப். 01

அநுராதபுரத்தில் கவரக்குளம் - குடாவெவ பகுதியில் பெருமளவான போதைப்பொருட்களுடன் இளைஞன் ஒருவர் வடக்கு மாகாண குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினருக்கு கிடைத்த தகவலின் பேரில், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து, 150 கிராம் ஹெரோயின் மற்றும் 80 கிராம் ஐஸ் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபரை கைது செய்து கவரக்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் குடாவெவ, கல்குளம் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

கவரக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# ஆசிரிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்கிறது

கொழும்பு, பெப். 01

தற்காலிக ஆசிரியர் நியமனங்களை நிரந்தரமாக்குமாறு வலியுறுத்தி, ஆசிரியர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஐந்தாவது நாளாக ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 7 வருடங்களாக பாடசாலைகளில் கற்பித்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள தமக்கு, ஆசிரியர் சேவையில் முறையான அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் எனக் கோரி ஜனவரி 26 ஆம் திகதி முதல் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். எதிர்க் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் சிவில் அமைப்புகளும் போராட்டக்களத்துக்கு வந்து எமக்கு ஆதரவாக நின்ற போதிலும் அரசாங்க தரப்பினர் எம்மைப் பொருட்படுத்தவில்லை என்றும் இதுவரை எந்தவித சாதகமான பதிலையும் வழங்கவில்லை என்றும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தமது நியமனம் உறுதிப்படுத்தப்படும் வரை களத்தை விட்டு நகரப் போவதில்லை என்று போராட்டக்காரர்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். (எ)

# மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரிப்பு

# இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும்

கொழும்பு, பெப். 01

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவிவரும் பதற்றமான சூழல் குறித்து தொடர்ச்சியான அவதானத்துடன் இருக்குமாறு இஸ்ரேலுக்கான இலங்கை தூதரகம் அங்குள்ள இலங்கையர்களுக்கு அறிவித்துள்ளது.

ஏற்படக்கூடிய எந்தவொரு அபாயகரமான சூழ்நிலையையும் கட்டுப்படுத்த இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் தயாராக இருப்பதாகவும் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சால் தகவல்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் அவ்வப்போது புதுப்பிக்கப்படும் என்றும் இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார்.

அவசர காலங்களில் ஏவுகணைத் தாக்குதல்கள் தொடர்பான தகவல்கள் தொலைபேசிகளுக்கு அனுப்பப்படும் என்றும் சைரன் ஒலிகள் கேட்டால் தமக்கு அருகிலுள்ள பாதுகாப்பு அறைகளில் தஞ்சம் அடைய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# துப்பாக்கி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் பற்றிய அறிவிப்பு

கொழும்பு, பெப். 01

2026 ஆம் ஆண்டுக்காக துப்பாக்கி அனுமதிப்பத்திரங்களை கொண்டுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்கள் தமது அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்துக் கொள்வது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

துப்பாக்கி அனுமதிப்பத்திரங்களை கொண்டுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்கள் 2026 ஆம் ஆண்டுக்காக தமது அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்துக் கொள்வதற்கான காலக்கெடு நேற்றுடன் நிறைவடைந்த நிலையில் இவ்வாறு அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த திகதிக்குள் புதுப்பிக்கத் தவறும் துப்பாக்கி உரிமையாளர்கள், துப்பாக்கிகள் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின்படி, பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அபராதத் தொகையை செலுத்தி அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது.

குறித்த திகதிக்கு முன்னர் தமது அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கத் தவறும் அனைத்து துப்பாக்கி உரிமையாளர்களுக்கும் எதிராக, செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி துப்பாக்கியை வைத்திருந்தமைக்காக துப்பாக்கிகள் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் விதிகளுக்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு தனது அறிவிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (எ)

# வெளிநாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 01

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் இரண்டு தோட்டாக்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர், எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வத்தளை நீதிவான் பிறப்பித்த உத்தரவுக்கமைய இவர் இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கிடைத்த தகவலுக்கமைய, பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று பமுணுகம பகுதியில் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டதாக மேலதிக தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிள்ளைகளின் கல்வி, உளநலம் மீதான

# சமூக ஊடக தாக்கம் குறித்து கொள்கை மீளாய்வு ஆரம்பம்

கொழும்பு, பெப். 01

கல்வி அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு மற்றும் டிஜிற்றல் பொருளாதார அமைச்சு ஆகியவை இணைத்து, பிள்ளைகள் மீதான சமூக ஊடகங்களின் தாக்கம் குறித்த தேசிய மதிப்பீடு மற்றும் கொள்கை மீளாய்வை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் ஏரங்க வீரரத்ன தெரிவித்தார்.

சிறுவர் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம், உள ஆரோக்கியம், சைபர் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் உள்ள நிபுணர்கள், சிவில் சமூகம் மற்றும் இளைஞர்களின் கருத்துகள் குறித்தும் கவனம் செலுத்தி, இந்தத் திட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்ல எதிர்பார்க்கப்படுகிறது என்றும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"சமூக ஊடகங்கள் தமது பிள்ளைகள் மீது ஏற்படுத்தும் தாக்கம் மற்றும் பிள்ளைகளின் பாதுகாப்புக்காக அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதும் இன்று இலங்கையில் பல பெற்றோர்கள் எதிர்கொள்ளும் ஒரு பாரிய பிரச்னையாகும். இதற்கான தீர்வாக, பிள்ளைகள் தொழில்நுட்பத்தை அணுகுவதை மறுப்பதாக இருக்கக்கூடாது. சமூக ஊடகங்கள் மூலம் கல்வி, படைப்பாற்றலை வளர்த்தல் மற்றும் தொடர்பாடல் போன்ற பல சிறந்த விடயங்கள் இடம்பெறுகின்றன. அதே நேரத்தில், நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு யதார்த்தமும் உள்ளது. பெரும்பாலும் எமது பிள்ளைகளுக்கு இணைய சூழல் பாதுகாப்பற்றதாகவும் அதற்கு அடிமையாகும் பழக்கத்துக்கு மற்றும் மன அழுத்தத்தை ஏற்படுத்தும் ஒன்றாகவும் காணப்படுகின்றது. இதன் பாதகமான விளைவுகளால், பிள்ளைகளின் தூக்கம், கல்வி, நட்பு மற்றும் உள ஆரோக்கியம் போன்றவை பாதிக்கின்றன.

இதற்கு அடிமையாகும் பழக்கத்தை நிறுத்த முடியாத சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. மேலும், அதை நிறுத்த முயற்சிக்கும் போது பிடிவாதம், கோபம் மற்றும் கூச்சலிடுதல் போன்ற நிகழ்வுகளை நாம் கண்டிருக்கிறோம். இந்த சிக்கல்கள் அவர்களின் கற்றல் மற்றும் மனநிலையை பாதிக்கிறது. பிள்ளைகள் மன அழுத்தத்துக்கு ஆளாகி, தன்னம்பிக்கை இழந்து துன்பப்படுவதை நாம் கண்டிருக்கிறோம்."- என்றார்.

(எ)

## சுற்றுலா துறையின் விரைவான வளர்ச்சிக்கு பல்வேறு முடிவுகள்

கொழும்பு, பெப். 01

சுற்றுலாத் துறையின் விரைவான வளர்ச்சிக்கு பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்களுக்கு இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சுற்றுலாத் தலங்களுக்கு பிரவேசிக்கும் வாய்ப்பை எளிதாக்கும் வகையில் டிஜிற்றல் அனுமதிப் பத்திரத்தை அறிமுகப்படுத்தும் செயல்பாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் சுற்றுலா விசாக்களை விரைவாக செயல்படுத்துவது குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக நாட்டில் உள்நாட்டு விமான சேவைகளை நெறிப்படுத்துதல், அவற்றில் நிலவும் சிக்கல்கள் குறித்தும் கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் சுற்றுலாத் தலங்களுக்கு இடையில் பேருந்து சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டன.

- ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள பேரவாவி சுத்திகரிப்பு பணிகளின் முன்னேற்றம் குறித்தும் இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது.

மேலும், மகாவலி அதிகார சபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான விடுதிகளை சுற்றுலாத் துறையின் மேம்பாட்டுக்காக எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பிலும் சுற்றுலாப் பயணிகள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை சுற்றுலா பொலிஸாரின் உதவியுடன் எவ்வாறு தீர்க்க முடியும் என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

திமிங்கலங்களை பார்வையிடும் மையங்களில் நிலவும் பிரச்னைகள் மற்றும் சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

(எ)

### முல்லைத்தீவு, திருகோணமலை உட்பட

## நாட்டின் பல பகுதிகளில் பலத்த மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, பெப். 01

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

முல்லைத்தீவு, திருகோணமலை, பொலநறுவை மற்றும் மாத்தளை மாவட்டங்களின் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என்று அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிற்பகல் 02.00 மணிக்கு பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டம் நிலவக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக ஏற்படக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

(எ)

### தொலைபேசி தகராறு:

## தந்தையால் மகள் வெட்டிக்கொலை!

கொழும்பு, பெப். 01

தொலைபேசி ஒன்று தொடர்பில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட தர்க்கம் முற்றியதில், தந்தை தனது மகளை கூர்மையான ஆயுதத்தால் தாக்கி கொலை செய்தார்.

களுத்துறை- உரகஸ்மங்ஹந்திய, தெல்கடை பிரதேசத்தை சேர்ந்த 14 வயது சிறுமியே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

உயிரிழந்த சிறுமிக்கும் தந்தைக்கும் இடையில் ஏற்பட்ட இந்த தர்க்கத்தின் போது, கத்தியால் தாக்கி இந்தக் கொலையை செய்தமை முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

காயமடைந்த சிறுமி எல்பிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

சந்தேகநபரான தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

# கொழும்பு தேசிய கண் மருத்துவமனை மருத்துவர் இடமாற்றம் முறையற்றது

கொழும்பு, பெப். 01

தேசிய கண் மருத்துவமனையில் சிகிச்சை சேவைகளை நடத்திச் செல்வதற்கு மேலதிக மருத்துவர்கள் தேவைப்படும் நிலையில், தற்போது கடமையாற்றி வரும் மருத்துவர்களை இடமாற்றுவது முறையற்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சாடியுள்ளது.

இந்தத் திட்டமிட்ட வெளியேற்றத்தால் சத்திரசிகிச்சைகள் முடங்கி, அப்பாவி நோயாளிகள் கடும் பாதிப்புகளை எதிர்கொள்வர் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்க பிரதிச் செயலாளர் ஹன்சமால் வீரசூரிய தெரிவிக்கையில்,

"பத்து வருடங்களுக்கு முன்னர் 2015 - 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய கண் மருத்துவமனையின் மனிதவள தேவையைக் கருத்தில்கொண்டு 121 மருத்துவர்களை நிர்ணயித்துள்ளனர். தற்போது அதற்கும் அதிக எண்ணிக்கையிலான மருத்துவர்கள் அங்கு பணியாற்றி வருவதாக சுகாதார அமைச்சர் கூறினார். எனினும், குறித்த மருத்துவமனை தரவுகளுக்கமைய ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட மருத்துவர்களே பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தேசிய கண் மருத்துவமனையில் புதிய அலகுகளும், நவீனமயப்படுத்தப்பட்ட பிரிவுகளும் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன் மருத்துவமனையின் சிகிச்சை சேவைகள் விரிவாக்கப்பட்டுள்ளன. எனினும், குறித்த சிகிச்சைகளை வழங்கும் தேவைக்கேற்ப மருத்துவர்கள் பணியமர்த்தப்படவில்லை. பழைய நிர்ணயத்தையே செயல்படுத்தி வருகின்றனர். அதில் எந்தவித மாற்றங்களையும் கொண்டு வரவில்லை. மருத்துவமனையில் கடமையில் உள்ள 15 பேர் விடுமுறையில் சென்றுள்ளனர். இதற்கமைய 106 பேர் பணியாற்றி வருவதுடன் அவர்களில் 65 பேருக்கு பணியிடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்கையில், மேலும் 2 மருத்துவர்களை இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு சந்துஷ்ட என்ற மருத்துவரையும் அங்கிருந்து வெளியேற்ற முயற்சித்து வருகின்றனர். குறித்த மருத்துவர் பணிபுரியும் அலகில் சத்திரசிகிச்சைக்காக 2500இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் முன்பதிவு செய்துள்ளனர். மருத்துவரை வெளியேற்றுவதால் அப்பாவி நோயாளர்களின் சிகிச்சைகள் முடங்கக்கூடும்".என்றார்.

(எ)

# புதையல் தோண்டிய கும்பல் சிக்கியது!

கல்முனை, பெப். 01

அம்பாறை - ஹிங்குரான பகுதியில் சட்டவிரோதமாக புதையல் தோண்டிய ஐந்து சந்தேக நபர்கள் தமன பொலிஸாரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டனர்.

தமன பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து பூஜை பொருட்கள் மற்றும் புதையல் தோண்ட பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 20 முதல் 71 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் அம்பாறை, மினுவாங்கொடை, பூகொடை மற்றும் கொடதெனிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தமன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

## பாடசாலை வளாகங்களை சுத்தம் செய்யும் திட்டம்

மட்டக்களப்பு, பெப். 01

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து பாடசாலை சூழல்களையும் சுத்தம் செய்து மாணவர்களின் மகிழ்ச்சிகரமான கல்விச் சூழலை உருவாக்கும் நோக்கில் செயல்படுத்தப்படும் விசேட வேலைத்திட்டம் களுவாஞ்சிக்குடி சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பட்டிருப்பு வலயக்கல்வி பணிப்பாளர் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைக்கமைய, மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து பாடசாலையிலும் இவ்வாறு சுத்தம் செய்யும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது என்று மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் மே. வினோராஜ் தெரிவித்தார்.

(எ)

## 20 இலட்சத்துக்கும் அதிகமான சட்டவிரோத சிகரெட்கள் அழிப்பு

கொழும்பு, பெப். 01

கடந்த நான்கு மாத காலப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 20 இலட்சத்து 32, 804 வெளிநாட்டு சிகரெட்கள் நேற்று முன்தினம் அழிக்கப்பட்டன.

இலங்கை சுங்கப்பிரிவின் ஏற்பாட்டில், கெரவலப்பிட்டிய கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் மின் உற்பத்தி நிலையத்தில் இவை அழிக்கப்பட்டன.

இந்த வெளிநாட்டு சிகரெட்களின் சந்தை பெறுமதி 305 மில்லியன் ரூபாயாகும்.

இந்தத் தொகுதி நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்தால் அரசாங்கத்துக்கு 271 மில்லியன் ரூபாய் வரி வருமானம் இழப்பு ஏற்பட்டிருக்கும் என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
01.02.2026 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் தை 18

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் அரசு கட்சி ஓர் ஆச்சரியம்

இலங்கை தமிழ் அரசு கட்சியின் காலஞ்சென்ற தலைவர் மாவை. சேனாதிராசாவின் சிலை அவரது சொந்த ஊரில் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. மாவையின் இறுதி நிகழ்வு எவ்வாறு அதன உள்வீட்டு அரசியல் சிக்கலின் வெளிப்பாடாகக் காட்சியளித்ததோ, அதே போன்று அவரது சிலை திறப்பிலும் அதன் உள் வீட்டு சிக்கல்கள் வெளிப்படுகின்றன.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவராக மாவை. சேனா திராசா இருந்தகாலத்திலேயே கட்சிக்குள் சிக்கல்கள் ஆரம்பித் திருந்தன - அந்த சிக்கல்களின் சாட்சியாகவே அவரும் மறைந்து போனார். இரா. சம்பந்தன் விடைபெற்றபோதும் அந்தக் கட்சி சிக்க லில்தான் இருந்தது - மூத்த தலைவர்கள் என்று அடையாளப் படுத்தப்பட்ட இருவருமே அவர்கள் தலைமைதாங்கிய கட்சியை சரி யான திசையில் கொண்டுசெல்ல முடியாதவர்களாகவே பிரிந்தனர்.

கட்சி இப்போது உள்முரண்பாடுகளில் சிக்கியிருக்கிறது. இந்த நிலையில் அதன் எதிர்காலம் இன்னும் முரண்பாடுகள் கொண்ட தாகவே இருக்கும். தமிழ் மக்களுக்கு ஓர் தேசிய அரசியல் இயக்கம் தேவையென்னும் அடிப்படையில் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தால் ஆரம்பிக்கப்பட்ட கட்சியானது, பிற்காலத்தில் ஏற்பட்ட அரசியல் கொந் தளிப்புகளால் அழிந்துபோகாமல் ஏதோ தாக்குப்பிடித்துக் கொண்டி ருப்பது ஓர் ஆச்சரியம்தான். இலங்கையின் பாரம்பரியமான தென்னி லங்கை கட்சிகள் அனைத்துமே நிலைகுலைந்துவிட்டன. ஏனெ னில், புதியதலைமுறையும் அரசியல் மாற்றங்களும் அவ்வாறான நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், 1949இல் ஆரம்பிக் கப்பட்ட இலங்கை தமிழ் அரசு கட்சி மட்டும், எவ்வித அரசியல் வெற் றிகளை காணபிக்காதபோதிலும்கூட, இப்போதும் தாக்குப்பிடித்துக் கொண்டிருக்கின்றது. ஒருவேளை தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் ரீதியில் சிந்தனை மாற்றமொன்று ஏற்படவில்லையா?

இதற்கு அந்தக் கட்சியின் தனித்துவம் காரணமல்ல மாறாக ஒரு குறிப்பிட்ட நெருக்கடியான காலத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அதனைப் பயன்படுத்தும் தீர்மானத்தை எடுத்தமைதான் ஒரேயொரு காரணம். ஒருவேளை இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு பதிலாக வேறு ஒரு கட்சியை உதாரணமாக, இலங்கை தமிழ் காங் கிரஸை புலிகள் பயன்படுத்தும் தீர்மானத்தை எடுத்திருந்தால், காணாமல் போன தமிழ் அரசு கட்சி, காணாமலேயே போயிருக்கும். தமிழர் விடுதலைக் கூட்டணி இல்லையென்றவுடன் உடனடியாகவே தமிழ் அரசு கட்சியின் வீட்டுச் சின்னமே கருத்தில் கொள்ளப்பட்டது.

அன்றையசூழலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தை கருத்தில் கொள்ளுமாறு கூறப்பட்டபோதும் வன்னி அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. காரணம் சைக் கிள் கட்சிக்கு தமிழ்த் தேசிய அடிப்படையிலான முகம் இருந்திருக் கவில்லை.

செல்வநாயகத்தால் உருவாக்கப்பட்ட தமிழ் அரசு கட்சி தமிழ்த் தேசிய அரசியலில் தாய்க் கட்சியாக நோக்கப்பட்டதுடன் இன்னோர் அடிப் படையான காரணமும் அந்தக் கட்சி தெரிவுசெய்யக் கார ணமாக இருந்தது.அதாவது, அதனை வடக்கு, கிழக்கு தழுவியதாகக் கொண்டுசெல்ல முடியும். இன்றும் வடக்கு, கிழக்கு தழுவிய மக்கள் ஆதரவுள்ள ஒரேயொரு கட்சியாக தமிழ் அரசு கட்சி மட்டுமே.ஆனால், அவ்வாறானதொரு கட்சி உள் முரண்பாடுகளுக்குள் சிக்கியிருக் கின்றது. முரண்பாடுகள் ஏற்படுவது சாதாரணமானதுதான். ஆனால், அதிலிருந்து மீளும் வழி தெரியாமல் இருப்பதுதான் சிக்கலானது.

# 2 நாட்களில் தீர்வு கிடைக்காவிடில் கொழும்பை ஸ்தம்பிக்க செய்வோம்!

## பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

கொழும்பு, பெப். 01

எதிர்வரும் திங்கட்கிழ மைக்கு முன்பதாக ஜனாதி பதியுடன் பேச்சுவார்த்தை ஒன்று அவசியம் என்று இலங்கை பாடசாலை அபிவி ருத்தி உத்தியோகத்தர் சங்கத் தின் செயலாளர் விராஜ் மனரங்க தெரிவித்துள்ளார்.

பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆரம் பித்துள்ள உணவு தவிர்ப்பு போராட்டம் நேற்று 6ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

இந்நிலையில், போராட் டத்தில் ஈடுபட்டுள்ளவர் களின் நலன் குறித்து விசாரிப் பதற்காக இத்தேகந்த சத்தா திஸ்ஸ தேரர் நேற்று போராட்ட இடத்துக்கு சென் றார். எதிர்வரும் செவ்வாய்க் கிழமை பேச்சுவார்த்தைக் கான வாய்ப்பு வழங்கப்படும் என ஜனாதிபதி பணிப்பாளர் நாயகம் ஒருவர் நேற்று முன் தினம் உறுதியளித்திருந்த போதிலும் எனினும், திங்கட் கிழமைக்கு முன்னதாக இந் தப் பேச்சுவார்த்தை வாய்ப்பு வழங்கப்படாவிட்டால், கொழும்பில் பாரிய எதிர்ப் புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும் என விராஜ் மனரங்க எச்சரித்துள் ளார்.

இதேவேளை, அபிவி ருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து விளக்குவதற்காக, அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் அஸ்கிரிய தரப்பு மகாநாயக் கர் வரக்காகொட ஞானரத் தன தேரரைச் சந்தித்து கலந்துரையாடினர். (அ)

# வாக்காளர் பெயர்ப் பட்டியல் திருத்த பணி நாளை ஆரம்பம்

கொழும்பு, பெப். 01

வாக்காளர் பெயர்ப் பட் டியல் திருத்தப் பணிகளை நாளை முதல் மீண்டும் ஆரம் பிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. எனினும், இம் முறை அந்தப் பணிகளுக்காக கிராம உத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் செல்லும் நட வடிக்கை முன்னெடுக்கப்பட மாட்டாது எனத் தெரிவிக் கப்படுகிறது.

இதற்கமைய, தமது வீட் டுக்குரிய செல்லுபடியான வாக்காளர் பெயர்ப் பட்டி யலில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் மற் றும் 2026ஆம் ஆண்டு வாக் காளர் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்படவேண்டிய பெயர்கள் தொடர்பிலான தகவல்களை கணக்கெடுப்பு அதிகாரிகளிடம் வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழு அனைத்துத் தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த நடவடிக்கை இரண்டு மாத காலத்துக்கு முன்னெ டுக்கப்படுவதுடன், அதன் பின்னர் உரிய தகவல்களை உள்ளடக்கிய பெயர்ப் பட்டி யல் காட்சிப்படுத்தல், உரிமை கோரல்கள் மற்றும் ஆட்சே பனைகளை ஏற்றுக்கொள் வது தொடர்பான அறிவித் தல் எதிர்வரும் மே மாதம் 05 ஆம் திகதி வெளியிடத் திட் டமிடப்பட்டுள்ளதாக தேர் தல் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

அதற்கமைய, அந்த அறி வித்தல் வெளியாகி 28 நாட்க ளுக்குள் உரிமைகோரல்கள் மற்றும் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். 2026 ஆம் ஆண்டு திருத்தத்தின் போது தகைமைகளை பூர்த்தி செய்திருந்தும் ஈ.ஆர். படிவத்தில் பெயரை உள்ள டக்க முடியாமல்போன நபர் களுக்கு இந்தக் காலப்பகுதி யில் உரிமைகோரல் விண் ணப்பத்தைச் சமர்ப்பிக்க முடியும் எனவும் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள் ளது.

மேலும், 2026ஆம் ஆண்டு பெயர் பட்டியலுக் குத் தகுதியற்ற ஒருவரின் பெயர் பதிந்துரைக்கப்பட் டிருப் பின், அது குறித்து ஆட்சேபனை தெரிவிப்ப தற்கு இந்தக் காலப்பகுதியில் சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (அ)

# இணைய வழியிலான பண மோசடி உயர்வு

கொழும்பு, பெப். 01

வங்கி அதிகாரிகள் மற் றும் பொலிஸ் உத்தியோகத் தர்கள் என நாடகமாடி இணையவழி ஊடாக பொது மக்களை அச்சுறுத்தி பண மோசடியில் ஈடுபடும் குழு வினர் தொடர்பில் பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு எச்சரித்துள்ளது.

இலங்கையில் அண்மைக் காலமாக குறுஞ்செய்திகள் மற்றும் இணையவழி ஊடா சுத் திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்படும் நிதி மோசடிகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.


இது தொடர்பில் சமீப நாட்களாகப் பல முறைப் பாடுகள் பதிவு செய்யப்பட் டுள்ளதாக அந்நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோசடிக்காரர்கள் பிர பல வங்கிகளின் பெயர்களை பயன்படுத்தி வாடிக்கையா ளர்களுக்குப் போலி குறுஞ் செய்திகளை அனுப்புகின்ற னர்.

குறித்த குறுஞ்செய்தியில், சந்தேகத்திற்கிடமான நட வடிக்கை காரணமாக உங்க ளது கடனட்டை இடைநிறுத் தப்பட்டுள்ளதாகவும், அதனை மீண்டும் செயற்படுத்த 24 மணித்தியாலங்களுக்குள் வழங்கப்பட்டுள்ள இணைய இணைப்பிற்குள் நுழைந்து தனிப்பட்ட விவரங்களை வழங்குமாறும் கோரப்படு கிறது.

அவ்வாறு விவரங்களை வழங்கத் தவறினால் அட்டை இ ரத்து செய்யப்படும் என அச்சுறுத்தப்படுகின்றது. இந்த இணைப்பினூடாக விவரங்களை வழங்குவோ ரைத் தந்திரமாகத் தொடர்பு கொள்ளும் மோசடிக்காரர் கள், அவர்களிடமிருந்து ஒருமுறை மாத்திரம் பயன் படுத்தப்படும் ஓ.ரி.பி. இலக் கத்தைப் பெற்று வங்கி கணக் கிலுள்ள பணத்தை மோசடி செய்கின்றனர். ஆகையால் பொதுமக்கள் விவரமறியாத போலி இணைய இணைப்பு களில் உள்நுழைய வேண் டாம்" என்று அறிவுறுத்தப் பட்டுள்ளனர் (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியம், அந்தஸ்தல்ல, அடிப்படை!

**மதிவதனி**



உணவு மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவை. ஆனால், தெற்காசிய சமூகங்களில் அது உடலின் தேவையை நிறைவேற்றும் எரிபொருளாக அல்ல, சமூக அந்தஸ்தை வெளிப்படுத்தும் கருவியாக மாறியுள்ளது. இந்த மனநிலை உணவின் சத்து நிலையை இரண்டாம் நிலைக்குத் தள்ளுகிறது. அதிக நெய், எண்ணெய், இனிப்புகள், இறைச்சி கொண்ட உணவு பணக்கார உணவு என உயர்த்திப் பேசப்படுகிறது. அதே நேரத்தில் கஞ்சி, பருப்பு, எளிய காய்கறி உணவுகள் ஏழை உணவு என்ற முத்திரை பெறுகின்றன. இதன் விளைவாக, சத்தான உணவு என்பது ஏழ்மையின் அடையாளம் என்ற தவறான சமூக நம்பிக்கை உருவாகிறது.

இயற்கை உணவு குறித்த பேச்சு அதிகமாக இருந்தாலும், நடைமுறையில் ரசாயன கலவைகள் நிறைந்த உணவுகளே அன்றாட உணவாக மாறியுள்ளன. லேபிள் வாசிப்பு, உள்ளடக்கப் புரிதல் போன்றவை பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றன. பிரபலமானது நல்லது என்ற நம்பிக்கை உணவுத் தேர்வை வழிநடத்துகிறது. இதனால் உணவு, உடல்நலத்துக்கான அறிவியல் முடிவாக அல்ல, சந்தை மற்றும் சமூக அழுத்தங்களின் விளைவாக மாறுகிறது.

ஐரோப்பிய சமூகங்களில், இதற்கு மாறாக உணவு பெரும்பாலும் உடல் நலத்தின் ஒரு பகுதியாகவே பார்க்கப்படுகிறது. உணவு பிரமீடு, அளவுக் கட்டுப்பாடு, சத்துக் கணக்கீடு போன்றவை அன்றாடப் பழக்கமாக உள்ளன. அங்கு உணவு ஒரு காட்சிப் பொருளல்ல, அது ஒரு பொறுப்பு. இந்த அடிப்படை வேறுபாடுதான் இரண்டு உலகங்களின் உணவு மனநிலையைப் பிரிக்கிறது.

தெற்காசிய சமூகங்களில் நாம் கடினமாக உழைக்கிறோம் என்பதே உடல் அசைவுக்கான விளக்கமாக வழங்கப்படுகிறது. விவசாயம், வீட்டு வேலை, உடல் உழைப்பு ஆகியவை உடற்பயிற்சியாகவே கருதப்படுகின்றன. அறிவியல் ரீதியாக, உடல் அசைவு என்பது திட்டமிட்ட, உடலை சமநிலைப்படுத்தும் இயக்கமாகும். உழைப்பும் உடற்பயிற்சியும் ஒன்றல்ல என்ற உண்மை பெரும்பாலும் புரிந்துகொள்ளப்படுவதில்லை.

நகரமயமாக்கல், தொழில்நுட்ப வசதிகள், அமர்ந்தபடி செய்யும் வேலைகள் ஆகியவை உடல் அசைவை பெரிதும் குறைத்துள்ளன. ஆனால், அதற்கேற்ற உடற்பயிற்சி பழக்கம் வளரவில்லை. உடல் அசைவு என்பது எடை குறைப்பதற்கான தற்காலிக முயற்சியாகவே பார்க்கப்படுகிறது. குண்டானால் நடைப்பயிற்சி, திருமணத்துக்கு முன்பாக உடற்பயிற்சிக் கூடத்துக்கு செல்வது என்ற மனநிலையே மேலோங்கியுள்ளது. ஐரோப்பிய சமூகங்களில், வாழ்க்கைமுறையின் ஒரு பகுதியாக உடல் அசைவு உள்ளது. நடைப்பயிற்சி, மிதிவண்டி ஓட்டுவது, விளையாட்டு, வெளிப்புற செயல்பாடுகள் போன்றவை உடல் எடைக்காக அல்ல, உடல்மன சமநிலைக்காக மேற்கொள்ளப்படுகின்றன. உடல் அசைவு என்பது தண்டனை அல்ல, அது உடலுக்கான பராமரிப்பு என்ற புரிதல் அங்கு வலுவாக உள்ளது.

உணவும் உடல் அசைவும் குறித்து பேசும் சமூகங்கள் கூட, மன நலன் குறித்து பேசுவதில் இன்னும் தயங்குகின்றன.

தெற்காசிய சமூகங்களில் உளநலம் ஒரு சுகாதாரப் பிரச்னையாக அல்ல, ஒரு தனிப்பட்ட பலவீனமாகவே பார்க்கப்படுகிறது. அதெல்லாம் மனசு பலவீனம்தான் அதிகமாக யோசிக்காதே போன்ற வார்த்தைகள் மனநலப் பிரச்னைகளை மூடி மறைக்கின்றன.

உணவு, உடல் அசைவு, மனநலம் இவை மூன்றும் ஒன்றோடொன்று இணைந்தவை. தவறான உணவு மனநிலையைப் பாதிக்கிறது. மன அழுத்தம் உடல் அசைவைக் குறைக்கிறது. உடல் அசைவு இல்லாமை மீண்டும் உணவுப் பழக்கத்தைப் பாதிக்கிறது. இந்தச் சங்கிலி உடைக்கப்படாவிட்டால், ஆரோக்கியம் முழுமை அடையாது.

உடல் தோற்றம் குறித்த சமூக விமர்சனங்கள் உளநலத்துக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள்ளன. அதிக எடை அசிங்கம், மெலிந்த உடல் அழகு என்ற வரையறைகள், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் மனதில் ஆழமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

ஐரோப்பிய சமூகங்களில் உள நலன் பேசப்படும் விஷயமாக மாறியுள்ளது. ஆலோசனை, சிகிச்சை, உதவி கேட்பது இவை பலவீனம் அல்ல, உரிமை என்ற புரிதல் அங்கு வளர்ந்துள்ளது. மனம் ஓர் உறுப்ப் அதற்கும் பராமரிப்பு தேவை என்ற உண்மை மெதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

உணவு, உடல் அசைவு, உளநலன் இவை மூன்றும் தனித்தனி அல்ல. ஒன்றைப் புறக்கணித்தால் மற்ற இரண்டும் சீர்குலையும். உணவை அந்தஸ்திலிருந்து விடுவிக்காமல், உடல் அசைவை வாழ்க்கை முறையாக மாற்றாமல், உள நலனைப் பேசத் தொடங்காமல், ஆரோக்கியம் முழுமையடையாது. எனவே, ஆரோக்கியம் ஒருவரின் ஒழுக்கம் அல்லது கட்டுப்பாடு எனக் குறைக்கப்படக் கூடாது அது சமூகப் பொறுப்பாகவே பார்க்கப்பட வேண்டும்.

மாற்றத்தின் முதல்படி குடும்பத்திலிருந்து தொடங்குகிறது. உணவு மேஜை கட்டுப்பாடுகளின் இடமாக அல்ல, பாதுகாப்பான உரையாடலின் இடமாக மாற வேண்டும். முழுவதும் சாப்பிடு, அதைச் சாப்பிட்டால் குண்டாவாய், இதெல்லாம் உனக்கு வேண்டாம் போன்ற வார்த்தைகள், குழந்தையின்மனதில் உணவை பயத்துடன் இணைக்கின்றன. குடும்பம் உணவை உடல் தேவையாகவும், மகிழ்ச்சியின் இயல்பான அங்கமாகவும் அறிமுகப்படுத்தும்போது மட்டுமே ஆரோக்கியம் நிலைபெறும். கல்வி அமைப்பும் இங்கு முக்கியப் பங்கு வகிக்கிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 01.02.2026 - 07.02.2026

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - தை 18

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பவுர்ணமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சற்று மந்தமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டம் நிறைந்ததாக இருக்கும். சில இடங்களில் வேலை அழுத்தம் அதிகமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில சிரமங்களை எதிர்பார்க்கலாம். அதே நேரத்தில் வேலை மாற்றம் சம்பள உயர்வு பற்றிய பேச்சு ஏற்படலாம். வியாபாரத்தில் நிதானமான முன்னேற்றம் உண்டாகும். புதிய முயற்சிகளில் எச்சரிக்கையாக ஈடுபடும் நேரம்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் ஏற்ற இறக்கமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை கடுமையாக இருக்கும். சில இடங்களில் பதட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில சிக்கல்களை எதிர்பார்க்கலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு செயல் தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் வருமானம் சற்று மந்தமாக இருக்கும். புதிய முதலீடுகளில் கவனமாக இறங்க வேண்டும். குடும்பத்தில் இருந்து வந்த முரண்பாடுகள் விலகும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை அழுத்தம் குறைவாக இருக்கும் , சில இடங்களில் உழைப்பு கூடுதலாக இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சுலபமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் மதிப்பு உயரும். புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கி சந்தோசம் அதிகரிக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சிறு சச்சரவு உண்டாகும் , சில இடங்களில் போராட்டமாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் உடனே நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் செல்வமும் அதிகரித்து உங்கள் வங்கி இருப்பு அதிகரிக்கும். முயற்சிகளில் நம்பிக்கையோடு ஈடுபடலாம்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் கொஞ்சம் அழுத்தமான நிலை உண்டாகும் , சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை உயர்வு கிடைக்கலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் சீக்கிரமாகவே நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி பணப்புழக்கம் அதிகரிக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சவால்கள் இருக்கும் , சில இடங்களில் எதிர்ப்புகள் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு பதவி உயர்வு வரலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சிறப்பாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி கையிருப்பு அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சலசலப்பு நீங்கி சந்தோசம் உண்டாகும். பிள்ளைகளால் குதூகலம் அதிகரிக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை அழுத்தம் குறைவாக இருக்கும். சில இடங்களில் உழைப்பு கூடுதலாக இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சுலபமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் மதிப்பு உயரும். புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். சந்தோசம் அதிகரிக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் ஏற்ற இறக்கமான பலன்கள் இருக்கும். சில இடங்களில் ஏமாற்றம் இருக்கும். சில இடங்களில் போராட்டங்கள் இருக்கும். உத்தியோக ரீதியாக சில மாற்றங்கள் வரலாம். ஆனால் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகமாக இருக்கும். புதிய முயற்சிகளுக்கு நல்ல வெற்றி கிடைக்கும். சில பிரச்சனைகள் முடிவுக்கு வரும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டம் இருக்கும் , சில இடங்களில் உழைப்பு அதிகம் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் நடந்து மன மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி வங்கி இருப்பு உயரும். புதிய முயற்சிகளில் நம்பி ஈடுபடலாம். பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சிறு சிரமங்கள் உண்டாகும். சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக ஊதிய உயர்வு வரலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். குழப்பங்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக மேன்மையான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சிறு அழுத்தம் உண்டாகும் , சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய தொழிலில் நம்பிக்கையோடு ஈடுபடலாம். பிள்ளைகளால் பெருமையும் நிம்மதியும் உண்டாகும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் போராட்டமாக இருக்கும். சில இடங்களில் சவால் அதிகமாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தள்ளிப் போகலாம். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி கையிருப்பு உயரும். புதிய முயற்சிகளில் நம்பி இறங்கலாம். குடும்பத்தில் இருந்து வந்த மனக்குழப்பம் நீங்கும். பிள்ளைகளால் எந்த தொந்தரவும் இருக்காது. அலுவலகத்தில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை ஒழிக்கும் சட்டமூலம் மூளவைத்திருக்கும் விவாதம் !



வீரகத்தி தனபாலசிங்கம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தான் பெற்று வந்த ஓய்வூதியத்தை நிறுத்தினால் சாகப்போவதாக ஜனதா விமுக்தி பெரமுன வின் (ஜே.வி.பி. ) முன்னாள் முக்கிய தலைவர்களில் ஒருவரும் 1999 ஜனாதிபதி வேட்பாளருமான நந்தன குணதிலக கடந்த ஓகஸ்டில் செய்த எச்சரிக்கை தலைப்பு செய்திகளில் இடம் பிடித்தது. தன்னை ஒரு 'கெரில்லா' என்று வர்ணித்த அவர் தன்னந்தனியானாக சாகப்போவதில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார். ஓய்வூதியம் நிறுத்தப்படும் பட்சத்தில் வாழ்வாதாரத்தை இழந்தால் வேறு பலரையும் கொலை செய்துவிட்டுத் தானும் உயிரை மாய்ப்பதற்கு 'தற்கொலைத் தாக்குதலை" நடத்துவதற்கு அவர் திட்டமிட்டிருந்தாரோ தெரியவில்லை.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இல்லாமல் செய்வதற்கான சட்டமூலத்தை அவரது முன்னாள் தோழர்களின் அரசாங்கம் ஜனவரி 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததை தொடர்ந்து அது குறித்து அரசியல் அரங்கில் ஒரு விவாதம் மூண்டிருக்கும் வேளையில், குணதிலக உயிருடன் இல்லை. குறுகிய கால சுகவீனத்துக்குப் பிறகு ஜனவரி 18 ஆம் திகதி அவர் காலமானார். தனது வாழ்வின் இறுதியில் மருத்துவச் செலவைக் கூட செலுத்த முடியாத நிலையில் அவர் இறந்ததாக கூறப்படுகிறது.



முன்னாள் ஜனாதிபதிகள் அரச செலவில் அனுபவித்து வந்த ஆடம்பரமான வரப்பிரசா தங்களை இல்லாமல் செய்த சட்டம் நிறைவேற்றப்பட்டு ஐந்து மாதங்கள் கடந்த நிலையில், சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை நீக்குவதற்கான சட்டமூலத்தை ஆட்சேபித்து பல மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தையும் இல்லாமல் செய்வதாக 2024 தேசிய தேர்தல்களில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது என்று அரசாங்க தலைவர்கள் கூறுகிறார்கள்.

சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்ட அன்றைய தினமே தற்போது ஓய்வூதியத்தை பெறுகின்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் அதற்காக அரசாங்கத்துக்கு ஏற்படுகின்ற செலவினங்கள் பற்றிய விபரங்களை அரசாங்க உறுப்பினர் காமினி இரத்நாயக்க பாராளுமன்றத்தில் வெளியிட்டார்.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கமே, சட்டம் ஒன்றைக் கொண்டுவந்து பாராளுன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை 1976ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. இலங்கையின் மூத்த இடதுசாரி தலைவர்களில் ஒருவரான கலாநிதி என்.எம். பெரேரா அப்போது நிதியமைச்சராக இருந்தார். குறைந்த பட்சம் ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

காமினி இரத்நாயக்க வெளியிட்ட விபரங்களின் பிரகாரம் தற்போது 330 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதியத்தை பெற்று வருகிறார்கள். இதற்கு மேலதிகமாக, மரணமடைந்த 182 பாராளுமன்ற உறுப்பினர்களின் விதவை மனைவிமாரும் ஓய்வூதியத்தை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களில் தங்கியிருந்த ஏழு பேர் அரச கொடுப்பனவுகளைப் பெறுகின்றார்கள்.

ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக மாதந்தம் 23, 541, 645 ரூபாவும் விதவைகளுக்காக 11,025,216 ரூபாவும் தங்கியிருந்தவர்களுக்காக 420, 121ரூபாவும் அரசுக்கு செலவாகுவதாக அவர் சபையில் கூறினார். ஓய்வூதியத்தை நீக்கும் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தை இம்மாத இறுதியளவில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இந்த ஒய்வுதிய ஒழிப்பு திட்டம் தொடர்பில் தனது விசனத்தை வெளிப்படுத்தியிருக்கும் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய, சகல கட்சிகளினதும் பிரதிநிதிகள் கொண்ட குழுவொன்றுடன் ஆராய்ந்து சட்டமூலத்துக்கு ஒரு மனிதாபிமான பரிமாணத்தை கொடுக்கக் கூடிய திருத்தங்களைச் செய்யுமாறு ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவிடம் கேட்டிருக்கிறார்.

> முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இல்லாமல் செய்யும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் திட்டம் தொடர்பில் கரு ஜெயசூரிய போன்ற தலைவர்கள் அரசாங்கத்திடம் முன்வைத்திருக்கும் கோரிக்கையை நாட்டு மக்கள் சாதகமான முறையில் நோக்க முடியாத அளவுக்கு இலங்கையின் அரசியல் வர்க்கம் ஊழல் நிறைந்ததாக இருந்து வந்திருக்கிறது.

ஊழல்வாதிகள் என்று அடையாளம் காணப்பட்டிருக்கும் அரசியல்வாதிகள் சார்பில் தான் பேசவில்லை என்பதை குறிப்பிடத்தவறவில்லை.பொதுவில் அரசியல்வாதிகளை பழிபாவத்துக்கு அஞ்சாத பேர்வழிகளாகவே மக்கள் நோக்குகிற அளவுக்கு இலங்கையின் அரசியல் ஊழல்மயமாகியிருக்கிறது என்பதால் ஜனாதிபதியிடம் தன்னால் முன்வைக்கப்படும் கோரிக்கை மக்களினால் எவ்வாறு நோக்கப்படும் என்பதில் ஜெயசூரிய கொண்டிருக்கும் கரிசனை கடிதத்தில் தெளிவாக பிரதிபலித்தது.

"சகல முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஊழல்வாதிகள் என்று அழைப்பது நியாயமானதல்ல. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஜே.வி.பி. யின் 30 முன்னாள் உறுப்பினர்கள் உட்பட மக்களின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெற்ற நேர்மையான இடதுசாரி அரசியல்வாதிகள் பலரும் அடங்குகிறார்கள்.

"எதிர்கால ஓய்வூதியத்தை பற்றி அக்கறைப்படாமல் வாழ்க்கையின் சிறந்த பருவத்தில் அரசாங்க சேவையில் இருந்து விலகி அரசியலுக்கு வந்த பலர் இருக்கிறார்கள். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இல்லாமல் செய்தால் அவர்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும். தற்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பவர்களும் எதிர்காலத்தில் அதே கஷ்டத்துக்கு ஆளாக வேண்டியிருக்கும்.

"நாடு சுதந்திரமடைந்த நேரத்தில் தனவந்தர்கள், நிலச்சுவாந்தார்கள் மற்றும் சமூகத்தின் உயர்மட்டத்தில் இருந்தவர்களும் அரசியலில் முதன்மை வாய்ந்தவர்களாக விளங்கினார்கள். 1956 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சமூக மாற்றம் அந்த நிலைவரத்தை பெருமளவுக்கு மாற்றியமைத்து சாதாரண மக்களும் அரசியல் வாய்ப்புக்களில் நியாயமான பங்கைப் பெறுவதற்கு வழிசமைத்தது.

ஜெயசூரியவை போன்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் வசதி படைத்த வாழ்க்கைப் பின்புலத்தைக் கொண்டவர்கள் என்பதால் அவர்கள் வாழ்வாதாரத்துக்காக ஓய்வூதியத்தில் தங்கியிருப்பவர்கள் அல்ல. ஓய்வூதியத்தை சமூக சேவைக்கு தன்னால் செலவிடக்கூடியதாக இருப்பதை போன்று பல முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களினால் செய்யமுடியாது என்றும் அவர்களின் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டால் அவர்கள் பெரும் இடர்பாட்டுக்கு உள்ளாகும் ஆபத்து இருக்கிறது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பின் பதில் தலைவராக இருக்கும் ஜெயசூரிய ஜனாதிபதிக்கு கடந்த வாரம் எழுதிய கடிதம் ஒன்றில் "பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதிய உரிமையை இல்லாமல் செய்தால், முறைகேடாக சொத்தைக் குவிக் கும் முதலாளித்துவவாதிகளும் பெரும் வர்த்தகர்கள் மற்றும் ஊழல்வாதிகளும் மீண்டும் அரசியல் களத்தை ஆக்கிரமிக்கும் சூழ்நிலை உருவாகும். சமுதாயத்தின் நலன்களுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய பிறகு மன அமைதியுடன் வாழ்வதற்காக மக்கள் பிரதிநிதிக ளுக்கு பல வசதிகளை வழங்குவது பல நாடுகளில் பாரம்பரிய நடைமுறையாக இருக்கிறது" என்று முன்னாள் சபாநாயகர் கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

பாராளுமன்ற உறுப் பினர்களின் ஓய்வூதியம் தொடர் பிலான விவாதம் நேர்மை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் பல கேள்விகளை எழுப்புகிறது. பொது மக்கள் பாதூரமான பொருளாதார இடர்பாட்டுக்கு உள்ளாகியிருக்கும் நிலையில், அதுவும் குறிப்பாக நான்கு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட முன்னென்றுமில்லாத பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்பதற்காக விதிக்கப்பட் டிருக்கும் கடுமையான வரிகள் உட் பட பல்வேறு சிக்கன நடவடிக்கைகளின் விளைவான நெருக்குதல் களினால் அவலப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு நேரத்தில் அரசியல்வாதிகள் வரப்பிரசாதங்களை அனுபவிப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது.

அரசாங்க சேவை ஊழியர்கள் தங்களது 60 வயது வரை 25-30 வருடங்கள் பணியாற்றிய பிறகு பெறுகின்ற ஓய்வூதியங்களை விடவும் பெருமளவுக்கு அதிகமான ஓய்வூதியத்தை அரசியல்வாதிகள் வெறுமனே ஒரு ஐந்து வருடங்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த பிறகு வாழ்நாள் பூராவும் பெறுவதை மக்கள் ஒரு முறைகேடாகவே நோக்குகிறார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களாக வருவதற்கு முன்னர் பெரும்பாலான அரசியல்வாதிகளிடம் இருந்த சொத்துக்களையும் பல வருடங்களாக பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த பிறகு அவர்களிடம் இருக்கும் சொத்துக்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அரசியலை அவர்கள் மக்கள் சேவையாக அன்றி செல்வத்தைக் குவிப்பதற்கான ஒரு வழிமுறையாகவே பயன்படுத்துகிறார்கள் என்பது தெளிவாக புரிந்துகொள்ள முடியும்.

உலகின் பல நாடுகளிலும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் வசதிகள் வழங்கப்படுவது நடைமுறையாக இருந்து வருகிறது. எமது அயல் நாடான இந்தியாவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாதாந்தம் 25 ஆயிரம் ரூபாவை ஓய்வூதியமாக பெறுகிறார்கள். முதல் ஐந்து வருடங்களுக்கு அப்பால் பாராளுமன்றத்தில் அவர்கள் அங்கம் வகித்த ஒவ்வொரு வருடத்துக்கும் 2 ஆயிரம் ரூபா மேலதிகமாக வழங்கப்படுகிறது. இந்தியா, இலங்கை போன்று அரசியலிலும் ஆட்சிமுறையிலும் ஊழலும் முறைகேடுகளும் தலைவிரித்தாடிய நாடுகளில் அரசியலைப் பயன்படுத்தி பெரும் தனவந்தர்களாக மாறிய எத்தனை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த ஓய்வூதியங்களை பெறுகிறார்கள் என்பது முக்கியமான ஒரு கேள்வி.


அதேவேளை, தென்கிழக்காசியாவில் மிகவும் வறிய நாடுகளில் ஒன்றான கிழக்கு திமோரில் அரசாங்க அதிகாரிகள் அனுபவிக்கும் ஆடம்பரமான சலுகைகளுக்கு எதிராக மாணவர்கள் தலைமையில் இடம்பெற்ற போராட்டங்களை அடுத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை ஒழிப்பதற்கான சட்டம் கடந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்த நிவாரணத்தில் இருந்து முறைமை மாற்றத்துக்கு !

**தோட்டத் தொழிலாளர் சமூகத்துக்கு நில உரிமையை வழங்கினால் பெருந்தோட்டப் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்ற காலாவதியாகிப்போன எண்ணத்தை மறுதலிப்பதற்கு இது ஒன்றே போதுமானதேயாகும். தொழிலாளர்களை நிலமற்றவர்களாகவும் மற்றவர்களில் தங்கியிருப்பவர்களாகவும் தொடர்ந்து வைத்திருக்கின்ற சட்டக் கட்டமைப்பும் சமூகக் கட்டமைப்புமே மாறாமல் இருக்கின்றன.**





கலாநிதி ஜெகான் பெரேரா

டித்வா சூளாவளியின் தாக்கம் சமச்சீர் அற்றது. மழையும் வெள்ளமும் இலங்கையின் வேறு எந்த பாகத்தை விடவும் மத்திய மலைநாட்டையே மிகவும் மோசமாகப் பாதித்தது. தற்போது முன்னெடுக்கப்படும் மீளக்கட்டியெழுப்பல் செயன்முறையும் அதே போன்று மலையக தமிழ்ச் சமூகத்துக்கு பாதகமாக சமச்சீர் அற்ற முறையிலேயே அமைந்திருக்கிறது.

இயற்கையின் சீற்றத்தினால் அனர்த்தங்கள் நிகழக்கூடும். ஆனால், அவற்றின் தாக்கங்களுக்கு அரசியல், வரலாறு மற்றும் நீண்டகாலப் பாகுபாடு ஆகியவையே உருக்கொடுக்கின்றன. பெருந்தோட்டங்களில் வேலை செய்து வாழ்ந்துவரும் மலையக தமிழ் மக்கள் ஏற்கெனவே பின்தங்கிய நிலையில் இருந்த வண்ணமே இந்த நெருக்கடிக்குள் பிரவேசித்தார்கள். இந்த சமுதாயம் பல தலைமுறைகளாக அனுபவித்துவருகின்ற மையப் பிரச்னையை டித்வா சூறாவளி தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது.

வேறுபட்ட சூழ்நிலைகளில் வாழ்கின்றவர்கள் வேறுபட்ட முறையிலேயே நடத்தப்பட வேண்டியது அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வதே நீதியினதும் நேர்மையினதும் அடிப்படைக் கோட்பாடாகும். சமத்துவமாக நடத்தப்படுவது அசமத்துவமானவர்களுக்கு ஒப்புரவற்ற விளைவுகளைக் கொண்டுவரலாம். இது ஒன்றும் தீவிரபோக்குடைய யோசனையல்ல. சமத்துவத்துக்கான அரசியலமைப்பு ரீதியான உத்தரவாதம், பாகுபாடின்மை மற்றும் சமூகநீதி தொடர்பிலான சர்வதேச நியமங்கள் ஆகியவற்றினால் பிரதிபலிக்கப்படுகின்ற நல்லாட்சியின் மையக் கோட்பாடாகும்

சுமார் பத்து வருடங்களாக பெருந்தோட்டக் கம்பனிகளிடமிருந்து சம்பள அதிகரிப்பைப் பெற்றுக்கொள்ள இயலாமல் இருக்கும் தொழிலாளர்களுக்கு நீதி செய்வதற்காக பட்ஜெட்டில் இருந்து அவர்களுக்கு தினமொன்றுக்கு 200 ரூபா மானியத்தை வழங்கிய போது அரசாங்கமே இந்த விடயத்தை வலிமையான முறையில் உணர்ந்திருந்தது. இதே தர்க்கம் டித்வா சூறாவளிக்கு பின்னரான இன்றைய காலப்பகுதியில் மிகவும் கூடுதல் பலத்துடன் பிரயோகிக்கப்பட வேண்டியதாகிறது.

டித்வா சூறாவளிக்கு பின்னர் நிவாரணம் மற்றும் மீளக் கட்டியெழுப்புதல் தொடர்பாக மற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துயையாடல் ஒன்று பெருந்தோட்டத் தொழிலாளர்களான மலையக தமிழ் மக்கள் தொடர்ச்சியாக அனுபவித்துவரும் முக்கியமான இடர்பாடுகளை கூர்மையான கவனத்துக்கு கொண்டுவந்தது. இரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்களினால் ஒப்பந்த அடிப்படையில் கூலித் தொழிலாளர்களாக இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டவர்களின் வம்சாவளியினரான பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கடுமையான துன்பம் தருகின்ற சூழ்நிலைகளில் தோட்டங்களுடன் பிணைக்கப்படிருக்கின்றார்கள்.

பிரிட்டிஷ் காலனியாட்சியிடம் இருந்து இலங்கை பெற்ற சுதந்திரம் நாட்டின் கொடியையும் அரசியலமைப்புக்களையும் மாற்றியது. ஆனால், அது இந்த உறவு முறையில் எந்தவிதமான அடிப்படையான மாற்றத்தையும் செய்யவில்லை. தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகள் அரசாங்கங்களினாலோ அல்லது பெருந்தோட்டக் கம்பனிகளினாலோ குறிப்பிடத்தக்க அளவுக்கு தரமுயர்த்தப்படவில்லை. நிரந்தரமான வசிப்பதற்காக மாத்திரமல்ல, கடுமையான காலநிலைகளுக்கு தாக்குப்பிடிக்கக்கூடியதாகவும் கூட அமைக்கப்படாத லயன் அறைகளிலேயே பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

சூறாவளி அனர்த்தத்துக்கு பின்னர் ஒவ்வொரு குடும்பத்துக்கும் (வீடுகளை துப்புரவு செம்வதற்கு 25 ஆயிரம் ரூபா தொடக்கம் வீடுகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு 50 இலட்சம் ரூபா வரை) நிவாரண உதவிகளை வழங்குவதாக அரசாங்கம் உறுதியளித்தது. துரதிர்ஷ்டவசமாக, பாதிக்கப்பட்ட மலையக தமிழ் மக்களில் மிகவும் பெரும் எண்ணிக்கையானவர்கள் வீடுகளை துப்புரவாக்குவதற்கான 25 ஆயிரம் ரூபாவையும் கூட பெறவில்லை.

மலையக தமிழ் தோட்டத்தொழிலாளர்கள் வசிக்கின்ற வீடோ அல்லது நிலமோ அவர்களுக்கு சொந்தமானதல்ல. அதன் விளைவாக சூறாவளியினால் பாதிக்கப்பட்ட ஏனையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற நிவாரணத்தை பெறுவதற்கு தகுதியற்றவர்கள் ஆகின்றார்கள். இங்குதான் வரலாற்று ரீதியான அநீதி ஒன்று சமகாலக் கொள்கைத் தோல்வியாக மாறுகின்றது. பக்கச்சார்பற்றதாக காண்பிக்கப்படுகின்ற ஆட்சிமுறை இறுதியில் முன்னைய பாகுபாட்டையே மீண்டும் செய்கின்ற ஒன்றாக வந்துமுடியக்கூடும்..

பிரச்சினை வீடமைப்பையும் தாண்டிச் செல்கிறது. அசமத்துவமான சூழ்நிலைகளுக்கு பிரயோகிக்கப்படும் சமத்துவமான விதிகள் அசமத்துவ்மான விளைவுகளையே கொண்டுவருகிறது. தோட்டத்தொழிலாளர்கள் தங்களது சிறிய வர்த்தகங்களை அல்லது தொழில் முயற்சிகளை பதிவுசெய்ய முடியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அவற்றை நடத்துகின்ற நிலம் அவர்களுக்கு சொந்தமானதாக இல்லாதிருப்பதே அதற்கு காரணமாகும். அவர்கள் தொழில் முயற்சிகள் பதிவு செய்யப்படாததால் அரசாங்கத்திடமிருந்து இழப்பீடுகளை பெறுவதற்கு தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள்.

இதற்கு மேலதிகமாக, அரசாங்கத்தின் தொடர்பாடல்கள் பெருமளவுக்கு சிங்களத்திலேயே இடம்பெறுகின்றன. பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், தேவையான ஆவணங்கள் அல்லது காலக்கெடுக்கள் பற்றி பல குடும்பங்கள் அறியாதவையாக இருக்கின்றன. தகவல் அசமத்துவம் வலுவற்ற தன்மையை ஆழமாக்குகிறது. இந்த பின்னணியில்தான் நடைபெற்றுக். கொண்டிருக்கின்ற காரியங்கள் இனவாத அடிப்படையிலானவை என்று மலையக தமிழ் மக்கள் தங்களது உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள். தேசிய பொருளாதாரத்துக்கு பெரியளவில் பங்களிப்புச் செய்த ஒரு சமூகம் நாட்டின் குடிமக்களுக்கு கிடைக்க வேண்டிய பயன்களில் இருந்து புறமொதுக்கப்படுகிறது.

அவர்கள் இவ்வாறாக பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவது அநாவசியமானது என்பதால் அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி மிகவும் பாரதூரமான கொடுமையாக இருக்கிறது. பெருந் தோட்டப்பகுதிகளில். இரண்டு இலட்சத்துக்கும். இரண்டு இலட்சத்து 40 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட ஹெக்டேயர் நிலம் பயன்பாட்டுக்கு எடுக்கக்கூடியதாக இருக்கிறது.

ஒவ்வொரு மலையக தமிழ் குடும்பத்துக்கும் பத்து பேர்ச் நிலத்தை கொடுப்பதாக இருந்தால் கூட, கணிப்பிடப்பட்ட ஒன்றரை இலட்சம் குடும்பங்களுக்கும் சுமார் 15 இலட்சம் பேர்ச் மாத்திரமே தேவைப்படும். இது வெறுமனே நாற்பது ஆயிரம் ஹெக்டேயர் மாத்திரமே. அதாவது பயன்பாட்டுக்கு எடுக்கக்கூடியதாக இருக்கும் பெருந்தோட்டப் பகுதி நிலத்தில் சுமார் இரண்டு வீதம் தான். இதற்கு மாறாக சிங்கள கிராமங்களில் வேறு இடங்களில் குடியமர்த்தப்படவிருப்பவர்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு இருபது பேர்ச் நிலம் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் மலையக்தமிழ் மக்களுக்கு எதுவும் வழங்கப்படுவதாக உறுதியளிக்கப்படவில்லை.

மலையக தமிழ் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யக்கூடியதாக பெருந்தோட்டப் பகுதிகளில் போதுமான நிலம் இருப்பதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது. அண்மைய கடந்த காலத்தில் சுற்றுலாத்துறை, புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் ஏனைய வர்த்தக முயற்சிகள் உட்பட பொருளாதார நோக்கங்களுக்காக பெருந்தோட்டப் பகுதி நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பெருந்தோட்ட நிலத்தில் கணிசமான பகுதிகள் பயன்தராத பயன்படுத்தப்படாமல் கிடப்பதாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. குறிப்பாக, முதுமைப்பட்ட தேயிலைச் செடிகள் உள்ள தோட்டங்கள், தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் இலாபத்தில் வீழ்ச்சி ஆகிய காரணிகள் பயனுறுதியுடைய முறையில் நிலத்தைப் பயன்படுத்துவதற்கு தடங்கலாக இருந்து வருகின்றன. அதனால், நிலம் இல்லை என்ற வாதம் நம்பக்கூடியதாக இல்லை. உண்மையான பிரச்சினை நிலம் இல்லை என்பதல்ல, அரசியல் துணிவாற்றலும் கொள்கைத் தெளிவும் இல்லாதிருப்பதேயாகும்.

தோட்டத் தொழிலாளர் சமூகத்துக்கு நிலத்தை வழங்குவதானால் உகந்த திட்டமிடலும் கலந்தாலோசனையும் தேவை. பெருந்தோட்டப் பொரு ளாதாரத்தின் ஒப்பேறும் தன்மை மலினப்படுத்தப்படா மல் இருப்பதை உறுதி செய்யக்கூடியதாக மிகுந்த கவனத்துடன் இந்த விவகாரத்தைக்கையாளவேண்டும். மலை யக தமிழர்கள் நாட்டின் வறிய சமூகத்தவர்களாக இருப்பதற்கான பிரத்தியேகமான சூழ்நிலைகள் குறித்து பரந்தளவில் இலங்கைச் சமூகத்துக்கு விளக்கிக் கூறவேண்டியதும் அவசியமானதாகும்.

ஆனால், இவையெல்லாம் திட்டமிட்டுச் செய்யப்பட வேண்டிய விடயங்களே தவிர, செயலில் இறங்காதற்கான சாட்டுகளாக இருத்தலாகாது. பெருந்தோட்டத் துறையில் சொத்துரிமை, தொழிற்பாங்கு மற்றும் நிலப்பயன்பாடு ஆகியவற்றில். ஏற்கெனவே பாரிய மாற்றங்கள் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றன. வீடமைப்புக்கு நிலத்தை ஒதுக்கீடு செய்வதற்கு மிகுந்த அவதானத்துடன் கட்டமைக்கப்பட்ட செயற்திட்டத்தை முன்னெடுத்தால் அது நீண்டகால நோக்கில் உறுதிப்பாட்டை பலப்படுத் துமேயன்றி பலவீனப்படுத்தாது.

பத்து இலட்சம் மலையக தமிழர்களில் ஒரு இலட்சத்துக்கும் ஒன்றரை இலட்சத்துக்கும் இடைப்பட்ட தொகையினரே தற்போது பெருந் தோட்டங்களில் வேலை செய்வதாக மதிப்பப்படுகிறது. தோட்டத் தொழிலாளர் சமூகத்துக்கு நில உரிமையை வழங்கினால் பெருந்தோட்டப் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்ற காலாவதியாகிப் போன எண்ணத்தை மறுதலிப்பதற்கு இது ஒன்றே போதுமானதேயாகும். தொழிலாளர்களை நிலமற்றவர்களாகவும் மற்றவர்களில் தங்கியிருப்பவர்களாகவும் தொடர்ந்து வைத்திருக்கின்ற சட்டக் கட்டமைப்பும் சமூகக் கட்டமைப்புமே மாறாமல் இருக்கின்றன.

வீடுகளுக்கு ஏற்பட்ட அழிவு தோட்டக் கம்பனிகளினால் மீளக்கட்டியெழுப்புவது சாத்தியமில்லை என்ற அளவுக்கு மிகவும் பாரியதாகும். பணத்தை இழப்பதாக தோட்டக் கம்பனிகள் கூறுகின்றன. கடந்த காலத்தில் கம்பனிகள் தோட்டங்களில் பெருமளவில் இலாபத்தைச் சம்பாதிப்பதில் நாட்டம் காட்டினவே தவிர, நீண்டகால நோக்கில் சமூக அபிவிருத்திக்காக முதலீடுகளைச் செய்யவில்லை. இதனால் அரசாங்கத்துக்கு தெளிவான பொறுப்பு ஒன்று இருக்கிறது. வாக்குரிமையைக் கொண்டிருக்கும் குடிமக்களின் விடயங்களைக் கையாளுவது அசௌகரியமாகத் தோன்றுகின்றபோது பொறுப்பைக் கைவிட்டு விடக்கூடிய அமைப்புக்களிடம் அனர்த்தப் பாதிப்பில் இருந்து மீட்சி பெறுவதற்கான பணிகளை ஒப்படைக்க முடியாது.

முறைமை மாற்றத்தைக் கொண்டுவருவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்த வண்ணமே தேசிய மக்கள் சக்தி தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தது. சகல குடிமக்களையும் சமத்துவமாக நடத்துவது என்ற கோட்பாடு குடியிருப்புக்காக மலையக தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு நில உரிமையை வழங்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது. இதை விரைவாக செய்வதே நீதியாகும். நாடு பூராவும் நிலமற்ற குடிமக்களுக்கு நிலத்தை வழங்குவதற்கான பல செயற்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்கின்ற பின்புலத்தில், மலையக தமிழ் மக்களுக்கு நில உரிமையை வழங்குவதே நல்லாட்சியாகும்.

நில உரிமையை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கினால், அவர்கள் தங்களது தொழில் முயற்சிகளையும் வர்த்தகங்களையும் பதிவு செய்து கடனுதவிகளை, காப்புறுதி மற்றும் இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். மிகவும் முக்கியமாக, கம்பனிகளின் நல்லெண்ணத்திலோ அல்லது அதிகாரிகளின் தீர்மானங்களிலோ தங்கியிருக்க வேண்டிய தேவையில்லாத ஒரு பங்கீடுபாடும் அதன் மூலமாக அவர்களை வந்துசேரும். தற்போதுள்ள கேள்வி, வீடுகளைகளை மீளக்கட்டியெழுப்பி சமத்துவமான குடிமக்கள் என்ற அந்தஸ்தை உறுதிப்படுத்துவதற்கு இந்த தருணத்தை அரசாங்கம் பயன்படுத்துமா இல்லையா எனபதேயாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள உயரடுக்கு கட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சி புதைக்கப்படுகிறதா?

பனங்காட்டான்

இன்று உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களால் தீவிரமாக அலசப்படும் விடயம் இலங்கை தமிழரசுக் கட்சியின் உள்ளக விவகாரம் அல்லது அதன் எதிர்காலம் பற்றியது. இதன் மையமாக அமைந்திருப்பது சுமந்திரனுக்கும் சிவஞானம் சிறீதரனுக்குமிடையான மோதல் என்றும் சொல்லலாம்.

எப்பாடுபட்டாவது சிறீதரனை கட்சியிலிருந்து படிப்படியாக அப்புறப்படுத்திவிடவேண்டும். முடியாவிட்டால் இப்போதைக்கு தமிழ்த் தேச விரோதியாக அடையாளம் காட்டி ஓரங்கட்டியாவது விடவேண்டும் என்பதில் சுமந்திரன் தீவிரமாக இருப்பதாக தமிழரசுக் கட்சியின் நீண்டகால ஆதரவாளர்கள் மத்தியில் பேசப்படுகிறது.

கட்சியின் மிகமிக மூத்த உறுப்பினரான சி.வி.கே.சிவஞானம் பதில் தலைவராக இருக்கும்வேளையில் பதில் செயலாளராகவுள்ள சுமந்திரன் தம் விருப்பப்படி காரியங்களை ஆற்றுவதாக உள்ளேயும் வெளியேயும் பலர் கருதுகிறார்கள்.. சில விடயங்களை சிவஞானம் அவர்கள் ஏற்றுக் கொண்டாலும் முழுமையாக அவ்வாறில்லையென்று கூறுகிறார்.

சிறீதரன் மீது சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது தவிர்க்க முடியாது இருப்பதாக தமக்கு நெருக்கமானவர்களிடம் கூறிவரும் சிவஞானம் அவர்கள், தாம் தலைமைப் பொறுப்பில் இருக்கும்வரை சிறீதரனை கட்சியிலிருந்து நீக்க அனுமதிக்கப் போவதில்லையென்றும், தம்மை மீறி இதனை எவராவது செயற்படுத்த முனைந்தால் தமது ஆளுமையை அப்போது தெரிந்து கொள்வார்கள் என்றும் தெரிவித்து வருவதாகவும் நம்பகமான வட்டாரங்கள் மூலம் அறிய முடிகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் கட்சியைச் சேர்ந்த சிலரை அறுவான், குறுக்கால போவான் என்று இவர் கூறியதையும் இப்போது சிலர் நினைவூட்டுகிறார்கள். அதேசமயம், ஒரு காலத்தில் சுமந்திரனும் சிறீதரனும் நெருக்கமான கூட்டாளிகளாக இருந்தபோது சிவஞானத்துக்கு எதிராக இவர்கள் செயற்பட்டதையும் அவர்கள் மறந்துவிடவில்லை. எனினும், கடந்த பொதுத்தேர்தலின்போது வேட்பாளர் பட்டியலில் சிறீதரனின் பெயர் தவிர்க்கப்பட்டிருந்த வேளையில், அவரது பெயரை தீர்மானமாக மொழிந்து இடம்பெறச் செய்தவர் சிவஞானமே என்ற தகவலும் இப்போது வெளிவரத் தொடங்கியுள்ளது.

பதில் செயலாளர் சுமந்திரனின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் திரு. சிவஞானம் அவர்கள் தலையாட்டியாக இருந்து வருவதான கருத்து இது தொடர்பான பல வட்டாரங்களில் மட்டுமன்றி புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியிலும் பரவலாக உள்ளது. தமிழர்களால் நடத்தப்படும் அமெரிக்க ஐரோப்பிய வானொலிகளிலும் தொலைக்காட்சிகளிலும் இடம்பெறும் அரசியல் நிகழ்ச்சிகளில் அண்மைக் காலங்களில் இதனை வெளிப்படையாக அவதானிக்க முடிகிறது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் அரசியலமைப்புப் பேரவையில் லஞ்ச ஒழிப்புத் திணைக்களத்துக்கு ஒருவரை தெரிவு செய்யும் விடயத்தில் சிவஞானம் சிறீதரன் அநுர குமர அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து எட்டு சந்தர்ப்பங்களில் அவ்வாறே நடந்து கொண்டதாகவும் தமிழரசுக் கட்சி அவர் மீது குற்றஞ்சாட்டியுள்ளது. சிறீதரன் மேற்படி பேரவைக்கு சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதியாகச் செயற்பட்டாரே தவிர தமிழரசுக் கட்சியினால் நியமிக்கப்பட்டவர் அல்ல.

இவர் மீதான குற்றச்சாட்டை சிங்கள மக்களுக்கு அவர் துரோகம் செய்துவிட்டது போலவும், அதனால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் நாடாளுமன்றத்தில் ஆக்ரோசமாகக் குரல் கொடுத்தவர் தயாசிறி ஜெயசேகர.. இவர்



> தமிழரசுக் கட்சிக்குள் புற்றுநோய்போல் பரவியிருக்கும் உட்கட்சி மோதல், பதவி மோகத்தால் ஒருவரை மட்டும் இலக்கு வைத்து செயற்படுகிறது. ஆனால், அதுவே எழுபத்தைந்து வருட பாரம்பரியத்தைக் கொண்ட தமிழரசை அழித்துவிடுமோ என்ற அச்சம் தாயகத்தைவிட புலம்பெயர் மண்ணில் கவலை தோய்ந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மகிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்தவர். முன்னைய பல அரசாங்கங்களில் கட்சி விட்டு கட்சி மாறி எப்போதும் அமைச்சராகவேயிருந்த ஜி.எல்.பீரிஸின் சட்டக்கல்லாரி மாணவர் இவர். தமது குருவைப் போலவே தயாசிறியும் பல கட்சிகளில் குந்தி எழும்பியவர். இவர் சிறீதரனுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சுமத்திய குற்றச்சாட்டுகளை வரிக்கு வரி சொல்லிக் கொடுத்தவர் மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்பது பகிரங்கமாகியுள்ளது. இவ்வாறான ஒரு கேவல நிலைக்கு தமிழரசுச் கட்சியின் நிகழ்காலம் மாறியுள்ளது.

சுமந்திரனின் விருப்பத்தை நிறைவேற்ற மட்டக்களப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் குருநாகல் மாவட்ட எம்.பியான தயாசிறியை நாடியுள்ளார் என்றால், எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் அரசு என்ற பெயரில் தந்தை செல்வாவால் உருவாக்கப்பட்ட கட்சி இன்று இந்தத் தடத்தில் பயணிக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

இந்தக் குறுநாடகத்தை நிரூபிப்பது போன்று சில நாட்களுக்கு முன்னர் அறிக்கை ஒன்று ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவந்துள்ளது. அமெரிக்காவின் நியுயோர்க்கை தளமாகக் கொண்ட ஷதமிழ் டயஸ்பரா நியூஸ்; இதனை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையின் ஒரு பகுதியை காலத்தின் தேவை கருதி இன்றைய பத்தியில் இணைப்பதை அவசியமெனக் கருதுகிறேன். அது பின்வருமாறு உள்ளது:

'இலங்கைத் தமிழரசுக் கட்சி வேண்டுமென்றே ஆபத்தான உள்நாட்டு நெருக்கடியை எதிர்கொள்கிறது - தற்செயலாக அல்ல, மாறாக திட்டமிடப்பட்டு. தமிழ் மக்களால் மீண்டும் மீண்டும் நிராகரிக்கப்பட்டு அவரது சொந்த கட்சிக்குள்ளேயே தோற்கடிக்கப்பட்ட எம்.ஏ.சுமந்திரனின் நடவடிக்கைகள், சிங்கள உயரடுக்கின் அரசியல் நலன்களுக்கு சேவையாற்றும் வகையில், தெளிவாக இலக்கு வைத்துள்ளது.

சுமந்திரனுக்கு தமிழ் மக்களிடமிருந்து ஜனநாயக ஆணை கிடையாது. பாராளுமன்றத் தேர்தல்களில் அவர் நிராகரிக்கப்பட்டார். தலைமைத்துவப் போட்டிகளில் கட்சி உறுப்பினர்களால் நீக்கப்பட்டார். மேலும் உள்சூழ்ச்சியின் மூலமாக மட்டுமே அரசியல் ரீதியாக உயிர் பிழைத்தார். ஆயினும்கூட, இன்று, அவர் தமிழரசுக் கட்சி மீது சர்வாதிகார கட்டுப்பாட்டைப் பயன்படுத்த முயல்கிறார்.

தமிழரசுக் கட்சி சாதாரண கட்சி அல்ல. இது தமிழ்த் தேசியத்தின் வரலாற்று அரசியல் குரல். தமிழ் அரசியல் ஓரங்கட்டலுக்கு ஒரு ஜனநாயக தீர்வாக கூட்டாட்சியைக் கோரிய முதல் கட்சி இதுவாகும். 1977ல் தெளிவான மக்கள் ஆணையுடன் தமிழீழத்தை ஆதரித்தது. இந்த மரபை உள்நாசவேலைகளால் அழிக்கவோ, கடத்தவோ அல்லது அகற்றவோ முடியாது. தமிழரசுக் கட்சியை எளிதில் அழிக்க முடியாது - வரலாறு இதை மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளது.

வெகுஜன ஆதரவைப் பெறமுடியாத சுமந்திரன் கட்சிக்குள் குழப்பத்தை உருவாக்க முடிவு செய்துள்ளார். அவரது மூலோபாயம் தெளிவாக உள்ளது. இலங்கை தமிழரசுக் கட்சியை உடைத்து, அதன் அடித்தளத்தை வீழ்த்தி, வெளிப்புற சிங்கள பெரும்பான்மை சக்திகள்-குறிப்பாக அநுர குமர திஸ்ஸநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. வடக்கு மற்றும் கிழக்கில் தேர்தல் ரீதியாக ஆதாயம் அடைய முடியும். இது சீர்திருத்தம் அல்ல. இது அரசியல் சிதைவு.

சிவஞானம் சிறிதரனை பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து நீக்குவதற்கான அண்மையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி இந்த நிகழ்ச்சி நிரலை சந்தேகத்திற்கு இடமின்றி அம்பலப்படுத்துகிறது. சிறீதரன் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவால் ஒருமனதாக நியமிக்கப்பட்டவர். அரசியலமைப்பு சபையில் அவரது பதவி இலங்கைத் தமிழரசுக் கட்சியால் மட்டும் வழங்கப்படவில்லை, மாறாக, பாராளுமன்றத்தின் சிறுபான்மை கட்சிகளால் வழங்கப்பட்டது. எனவே, அந்த பதவியில் இருந்து அவர் ராஜினாமா செய்ய கட்டாயப்படுத்த கட்சிக்கு சட்டபூர்வமான அதிகாரம் இல்லை. இந்த நடவடிக்கை தனிப்பட்ட பழிவாங்கல், அரசியல் பாதுகாப்பின்மை மற்றும் வெளிப்புற அழுத்தங்களுக்கு கீழ்ப்படிதல் என்பதைத் தவிர வேறொன்றையும் பிரதிநிதித்துவம் செய்யவில்லை.

சுமந்திரன் கொழும்பில் இருந்து செயற்படுகின்றார். தமிழர் தாயகத்தின் யதார்த்தத்தில் அவர் வாழவில்லை. இராணுவமயமாக்கல், நில அபகரிப்பு, கண்காணிப்பு அல்லது கட்டமைப்பு பாகுபாட்டை அவர் எதிர்கொள்ளவில்லை. ஆயினும்கூட, தனக்கு இனி அதிகாரம் இல்லாத மக்களின் அரசியல் எதிர்காலத்தை ஆணையிட அவர் கருதுகிறார். அவரது நடவடிக்கைகள் தமிழர்களின் அபிலாசைகளுக்கு பொறுப்புக்கூறல் அன்றி, சிங்கள உயரடுக்கின் அதிகார கட்டமைப்புகளுடன் இணைந்திருப்பதை பிரதிபலிக்கின்றன" என்று இந்த அறிக்கையின் முக்கிய பகுதி தெரிவித்துள்ளது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பர். புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் புலன் பெயராமலேயே இருக்கிறார்கள் என்பதற்கு ஷதமிழ் டயஸ்பரா நியூஸ்; நல்லதொரு சான்று. முன்னர் பல தடவை வெளிநாடுகளுக்குச் சென்றபோது அங்கு வாழும் புலன் பெயராத் தமிழர்களால் எந்த வகையில்தாம் வரவேற்கப்பட்டார் என்பதையும், சில நாடுகளில் குசினிக் கூட்டங்களில் மட்டும் பங்குபற்ற நேர்ந்தது பற்றியும் அனுபவம் பெற்ற சுமந்திரனை தமிழரசுக் கட்சி எங்கு வைக்க வேண்டுமென்பதை சிந்திக்க வேண்டிய காலம் இதுவென்பதை ஷதமிழ் டயஸ்பரா நியூஸ்; புரியும் வகையில் தெரியத் தந்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தி உலகின் யுகசிற்பி

மாலி



இந்திய துணைக்கண்டத்தில், பல தசாப்தங்களாக அதன் அரசியல், சமூகம், மக்கள் பற்றிய ஒரு தெளிந்த புரிதலை பொதுமக்களிடத்தில் வடிவமைத்த ஒரு யுகசிற்பியாக வரலாற்றில் சிறக்கிறார் ஓர் ஒலிபரப்பாளர். நிதானமும், ஆழ்ந்தநோக்கும், நம்பகஅதிகாரமுமானஅவருடைய பணிநெறியில், இந்தக் காலம், ‘கடைசியில் எதிலும் அவரின் சொல்லுக்காக காத்திருந்தது’.

பிபிசியின் புது டில்லி பணிப்பீடத் தலைவராகவும்,தெற்கு ஆசிய நிருபராகவுமிருந்தமார்க் ரலி, தெற்கு ஆசிய நாடுகளில் மாத்திரமல்ல, தெற்கு ஆசிய நாடுகளின் விவகாரங்களை அவதானிக்கும் உலகநாடுகள் எங்கும் பரிச்சயமானவர். பிபிசியில் ‘இந்தியாவின் குரல்’ என அழைக்கப்பட்ட இவர், பிபிசியின் அதிகீர்த்திமிக்க ஒரு வெளிநாட்டு நிருபர். பிபிசி உலகசேவையில் பணியாற்றியபின் ‘பிபிசி றேடியோ-4’ இல் பணியாற்றினார்.

பிரிட்டிஷ் காரரானமார்க் ரலி, இந்தியாவில் கல்கத்தாவில் (கொல்கத்தா) பிறந்து, புது டில்லியில் கடந்த 25ஆம் திகதி தனது 90ஆவது வயதில் காலமானார். இந்திய வெளிநாட்டவர் குடியுரிமையையும் பெற்றிருந்தவர், ஹிந்திமொழிசரளமாகபேசுவார்எழுதுவார். ‘ரலிசாஹிப்’ என்றும்கூட அறியப்படுபவர்.

1964இல் பிபிசியில் இணைந்தவர் 1965இல் புது டில்லியில் பணியாற்றத் தொடங்கினார்.1993இல் பிபிசியின் அப்போதைய நிர்வாக இயக்குநராகவிருந்த ஜோன் பேர்ட்டுடன் ஏற்பட்ட முரண்பாட்டில் அடுத்த ஆண்டு (1994) பிபிசியுடனானதனதுஉத்தியோகபூர்வபணியை இராஜிநாமாசெய்தவர், 2019வரை சுயாதீனமாக தனது பணியில் தொடர்ந்தார்.

அரைநூற்றாண்டுக்கும் மேலான இந்த காலப்பகுதியில் இந்தியாவிலும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் நிகழ்ந்த அத்தனை அதிமுக்கிய நிகழ்வுகளிலும் மார்க் ரலியே இப் பிராந்தியத்தின் முக்கிய நபரானார். இவர் சொல்பவைதான் இந் நிகழ்வுகளின் உண்மைகளாயின.

1965 இந்திய-பாகிஸ்தான் யுத்தம், அதன் பின்னர் 1971 இந்திய-பாகிஸ்தான் யுத்தம், அதன் விளைவான வங்கதேசத்தின் உதயம், 1975இல் இந்திராகாந்தியின் அவசரகால ஆட்சி, 1984 இல் அம்ரித்சாரில் பொற்கோவில் தகர்ப்பு, சீக்கியதீவிரவாதம், இந்திராகாந்திபடுகொலை, 1991இல் ராஜீவ் காந்திபடுகொலை, 1992இல் பாபர் மசூதிதகர்ப்பு போன்றவற்றோடு, இலங்கையில் தமிழர்கள் பிரச்னை, தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவிரவாத நடவடிக்கைகள் போன்ற இவை அனைத்திலும் மார்க் ரலியைத்தான் எல்லோரும் காத்திருந்தார்கள் நம்பினார்கள்.

இந்திராகாந்திகொலைசெய்யப்பட்டபோது,அவரதுமெய் காப்பாளரால் அவர் கொல்லப்பட்டார் என்பதை நம்ப இயலாத நிலையில், ராஜீவ் காந்தி, மார்க் ரலியின் பிபிசி செய்தியைக் கேட்டபின்னர்தான் அந்த சந்தேகத்தில் தெளிந்தார் என்பது பத்திரிகை உலகில் பொதுவாக நாம் அறிந்தது.

செய்திகளை முந்திவெளிக் கொணர்வதும், உறுதிபட வெளிக்கொணர்வதும் மார்க் ரலியின் தனித்துவம். இந்திராகாந்தியின் கொலையைக்கூட இந்திய வானொலிகளைவிட, சிலமணி நேரங்களுக்கு முன்னதாகவே பிபிசிஅறிவித்தது. கொலைச் செய்தி ஒருவதந்தியாக பரவியபோதிலும், பிபிசி செய்திதான் அதனை முதன் முதலாக உறுதிப்படுத்தியது.

1979இல், பாகிஸ்தான் பிரதமர் சுல்பிகார் அலிபூட்டோ தூக்கிலிடப்படலாம் என்ற யூகம் எழுந்தபோது, ராவல்பிண்டி விரைந்தார் மார்க் ரலி. அவர் தங்கியிருந்த ஹோட்டலின் இன்னோர் அறையில் அவரின் இன்னொரு பத்திரிகை நண்பரும் இருந்தார். மறுநாள் காலையில், பூட்டோ தூக்கிலிடப்பட்ட செய்தியை அந்தநண்பர் பிபிசியில் கேட்டார்.

1990இல் நெல்சன் மண்டேலா சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட வேளையில் அந்த ராவல் பிண்டி நண்பருடன்தான் மார்க் ரலி தென்னாபிரிக்கா சென்றிருந்தார். மண்டேலாவுடன் இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், “மார்க் ரலிமூலம் நான் இந்தியாவை உன்னிப்பாக அறிந்துகொண்டிருக்கிறேன்” என்று மண்டேலா கூறியதாக அந்தநண்பர், சக நண்பர்களிடம் கூறியிருந்தார்.

இந்திராகாந்தி அவசரகால சட்டத்தை அமுல்படுத்திய போது, செய்திகளை அரசு அங்கீகாரத்துடன தான் பிரசுரிக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. மார்க் ரலி அதனை ஏற்கமறுத்தார். அவசரகால சட்ட அமுலாக்கத்தை அமைச்சரவையில் பலர் எதிர்த்ததாகவும், அமைச்சர் ஒருவர் இராஜிநாமா செய்துள்ளதாகவும் பிபிசியில் செய்தி வெளியானதாக அரசு தரப்பில் பரவலான பேச்சுக்கள் எழுந்தன. மார்க் ரலி, 24 மணிநேரத்தில் இந்தியாவை விட்டு வெளியேற உத்தரவிடப்பட்டது. ஆனால், உண்மையில் அப்படி ஒரு செய்தி வெளியாகவில்லை என்பது பின்னர் உறுதியானது. ஒன்றரை ஆண்டுகளின் பின்னர் மார்க் ரலி மீண்டும் டில்லிதிரும்பினார்.


அயோத்திபாபர் மசூதி தகர்ப்பில் மார்க் ரலி தனது முற்றுமுழுதான எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.அந்த வேளையில் இந்து தீவிரவாதிகளால் அவர்மீது கொலை மிரட்டல் கோஷங்கள் எழுப்பப்பட்டு, கோவில் அறை ஒன்றுள் ஒருநாள் பூட்டிவைக்கப்பட்டவர், இந்துமத குரு ஒருவரின் துணையுடன் வெளிவந்தார்.

சுதந்திர இந்தியாவின் மதசார்பின்மைக்கு பாபர் மசூதி தகர்ப்பு முற்றிலும் மாறானது என்பதைமார்க் ரலி எப்போதும் வற்புறுத்தினார். கேம்பிரிட்ஜில் வரலாற்றுடன் இறையியல் கல்வியும் கற்று, இங்கிலாந்து திருச்சபையில் ஒரு மதகுருவாவதற்காக லிங்கன் இறையியல் கல்லூரியில் கற்கையை ஆரம்பித்தவர் மார்க் ரலி. ஆனால், தன்னுடைய இயல்பான போக்கில், அது உடன்படாதென்பதை உணர்ந்ததில் அங்கிருந்து வெளியேறி, பிபிசியில் இணைந்தவர்.

‘பிரிட்டிஷ் ராஜ்’ வம்சத்தின் குழந்தை என்று அவர் தன்னைச் சொல்வார். பிரிட்டிஷ் ஆட்சியின் போது இந்தியாவில் ஆளுமை செலுத்திய கிழக்கிந்திய கம்பனி ஒன்றின் பங்குதாரரானபிரபலவர்த்தகர் இவருடையதந்தையார்.தாயாரும் பிரிட்டிஷ் குடும்பத்தில்,வங்காளத்தில் பிறந்தவர். மார்க் ரலி, 1935 ஒக்ரோபர் 24ஆம் திகதி கல்கத்தாவில் பிறந்தார்.

இந்திய சமூகத்துடன் பழகவிடாமலேயே வளர்க்கப்பட்டார் மார்க் ரலி. கார்ச் சாரதியிடம் எண்களை ஹிந்திமொழியில் எண்ணத் தெரிந்ததைக் கண்ட இவரது செவிலி, “இது வேலைக்காரர்களின் மொழி உன்னுடையதுஅல்ல” என்று அவரைக் கடிந்து கொண்டாராம்.

நான்கு வயதில் டார்ஜீலிங்கில் பிரிட்டிஷ் விடுதி பாடசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டவர், ஒன்பது வயதில் கல்விக்காக இங்கிலாந்து சென்றார்.



இந்திய நாட்டைநேசித்து, ஓர் இந்தியனாக இந்தியாவிலேயே வாழ்ந்து, தன் வாழ்வை இந்தியாவின் வரலாற்றில் ஒரு நெறியோடு பதித்த ஒரு வரலாற்று மனிதர் மார்க் ரலி.

பிபிசியின் பாரம்பரியத்தை உணராது, அதன் மதிப்பீடுகளைக் குறைவாக்கி, ‘பயந்த’ ஒரு சுபாவத்துடன், நட்டகல் போல புதிய நிர்வாக இயக்குநர் பிபிசியை வழிப்படுத்த தலைப்பட்டிருப்தாக ஜோன் பேர்ட் மீது கண்டனம் தெரிவித்து இராஜிநாமா செய்தமார்க் ரலி, பிபிசி றேடியோ - 4 இல் ‘ஏதோஒன்று புரிகிறது’ என்ற வாராந்த நிகழ்வின் ஆற்றுகையாளராக பிரபல்யம் பெற்றார். இளமையில், ஓர் ஆத்மீக நம்பிக்கையில் வாழ்வைத் தொடர நினைந்தவர், பின்னர், இறைவனை அடைய பலவழிகள் உண்டு என்று, இந்திய வாழ்வில் பெற்ற அநுபவத்தில், மீண்டும் அந்த நம்பிக்கையும் ஆன்மீகமுமாக இந்த வானொலி தொடர் நிகழ்வை அளித்தார்.

செய்தியின் நம்பகத்தன்மைக்கு, ‘மார்க் ரலி’ இன்னொரு பெயராக இருக்கும். அனைத்தையும் மீளவும் உறுதிப்படுத்தி, துணிச்சலாகவும், சுருக்கமாகவும் அளிப்பது அவரது முத்திரை. அவருடைய அந்தக் காலத்தில் வானொலி மிகுந்த மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றிருந்தது. ஆனால், இன்று வானொலியிலும் செய்தி ஊடகங்களிலும் சொல்லப்படுபவை ஏற்படுத்தும் குழப்பங்கள், தடுமாற்றத்தையே ஏற்படுத்துகின்றன.காலத்தின் நவீனத்துவமும் இதற்கான காரணியாகிறது.

இந்த மாற்றத்தை மார்க் ரலியும் சொல்கிறார்: “நானும் என்னுடைய எழுத்து நடையை மாற்றிக்கொண்டு விட்டேன். ஏதோ காரணத்துக்காக, 300 சொற்கள் தட்டச்சானதும் நிறுத்திக்கொண்டு விடுகிறேன்.”

மார்க் ரலி, இந்தியா தொடர்பிலான பிரசித்தமான பல நூல்களையும் எழுதியுள்ளார். 1960இல் மணமான இவருக்கு இருபுதல்வர்களும் இருபுதல்விகளும் உள்ளனர். 1981இலிருந்து புது டில்லியில் எழுத்தாளரான ஜிலியன் றைற்றுடன் வாழத் தொடங்கினார்.

1985இல் எலிஸபெத் மகாராணியின் ‘ஓபிஈ’ பட்டத்தையும், 2002இல் ‘சேர்’ பட்டத்தையும் பெற்றவர், இந்திய ஜனாதிபதியிடமிருந்து 1992இல் ‘பத்மசிறீ’ விருதையும், 2005இல் ‘பத்மபூஷண்’ விருதையும் பெற்றார்.மகாராணியிடமிருந்து பெற்ற ‘சேர்’ பட்டம், இந்தியாவுக்கான கௌரவம் என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த 25ஆம் திகதிமார்க் ரலி, புது டில்லியில் அவரது 90ஆவது வயதில் காலமானார்.

செய்தி ஊடகத் துறையின் ஒருயுக புருஷர் மார்க் ரலி. இந்த மனிதருடனான ஒருவாரகால அளவிலான பழகுதலில், இத்தனையையும் ஒரு சுய தரிசனமாக எழுதும் உணர்வே மேலிடுகிறது. எலிஸபெத் மகாராணியின் இலங்கை விஜயத்தின் போது 1981இல், சுமார் ஒரு வாரகாலம் மகாராணியின் பத்திரிகையாளர் குழாத்தில் ஒருவனாக அவருடன் பழகினேன். அந்த நாள்களை இவருடனான ஒரு ‘பத்திரிகை முகாம்’ என்றே சொல்வேன். அடுத்த ஆண்டில், லண்டனில் பிபிசி புஷ் ஹவுஸில் ஒருநாள் சந்தித்திருந்தேன். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் முருகன்? யார் சூரன்?



நிலாந்தன்

தமிழ் ரப் பாடகர் வாகீசனைத் தூக்கியது அவருடைய முருகன் பாடல். அப்பாடலில் முருகன் ஒரு கடவுளாக மட்டும் சித்தரிக்கப்படவில்லை. அவர் தமிழ் மக்களைக் காக்கும் ஒரு தலைவராகவும் வர்ணிக்கப்படுகிறார். அதாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரை மறைமுகமாக அது சுட்டுகிறது என்று பொதுவாக விளங்கிக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு, தனது முருகன் பாடலுக்குள் உட்பொதிந்துள்ள அரசியலுக்கு ஊடாகவும் கொண்டாடப்படுகின்ற ஒரு ரப் பாடகரைக் கொண்ட அதே சமூகத்தில்தான், அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட உறுப்பினர் ஒருவர் அனுரவை முருகனோடு ஒப்பிட்டு முகநூலில் எழுதியிருந்தார்.

அனுரவை தோழராக, சகோதரராக, ஏழைகளுக்கு இனியவராக, செல்ஃபி நாயகனாக... இன்னபிறவாக சித்திரித்த அரசியல் விசுவாசம், அதன் அடுத்த கட்டமாக அவரை கடவுளுக்கு நிகராகச் சித்தரிக்கும் ஒரு வளர்ச்சிக்கு வந்திருக்கிறது. தேசிய மக்கள் சக்தியின் தமிழ் உறுப்பினர்களில் ஒருவர் அவ்வாறு வர்ணித்துள்ளார். ஒரு சிங்களத் தலைவரை அவருடைய தமிழ் அடியார் ஒருவர் இவ்வாறு தெய்வ நிலைக்கு உயர்த்துவது என்பது இதற்கு முன் காணப்பட்டிராத ஒன்று.

சிங்களத் தலைவர்களைப் போற்றும் தமிழ்த் தொண்டர்கள் இதற்கு முன்னரும் இருந்திருக்கிறார்கள். ஆனால் அப்பொழுது டிஜிட்டல் புரோமோஷன் என்பது இருக்கவில்லை. தவிர யுத்த காலங்களில் இனமுரண்பாடு கூர்மையாக இருந்தபோது சிங்களத் தலைவர்களைப் பகிரங்கமாகப் போற்ற தமிழர்கள் துணியவில்லை. இப்பொழுது ஆயுத மோதல்கள் இல்லாத ஓர் அரசி யல் சூழலில், அனுர அரைக்காற் சட்டையோடு நடக் கிறார். பாதுகாப்பு வேலிகளைத் தாண்டி வந்து செல்பி எடுக்கிறார். தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் கைகளை நீட்டி அவரை அழைக்கிறார்கள். மூதாட்டிகளும் சிறுவர்களும் நெருங்கிச் சென்று அணைக்கிறார்கள். இந் தக் காட்சிகளை அரசாங்கத்தின் டிஜிட்டல் புரோமோ ஷன் அணி கவர்ச்சியான காணொளிகளாக சந்தையில் விற்கிறது.

அனுர எங்கே நாயகனாகிறார்? அல்லது நாயகன் ஆக்கப்படுகிறார்?

அவருடைய எளிமை, உடல் மொழி போன்றன அவரை விளம்பரப்படுத்த வசதியாக உள்ளன. இதற்கு முன்னிருந்த சிங்களத் தலைவர்கள் பாதுகாப்பு வேலிகளைத் தாண்டி வர முடியாதவர்கள். தமிழ் மக்கள் அவர்களை நெருங்கி அணைக்க முயற்சிக்கவில்லை மட்டுமல்ல, அவ்வாறு அணைக்கவரும் தமிழர் ஒரு மனிதக் குண்டாக இருக்கலாம் என்று அச்சப்படும் அரசியல் சூழல் இரு தசாப்தங்களாக இருந்தது.

அனுர அந்தப் பயமின்றி தமிழ் மக்களை நெருங்கக் கூடிய அரசியல் சூழல் இப்பொழுது உண்டு. தவிர அவருடைய கட்சிக்காரர்கள் தமிழ் மக்களை அவரை நோக்கிக் கொண்டுசெல்கிறார்கள். அரசாங்கத்தின் டிஜிட்டல் புரோமோஷன் அணி அதைக் காணொளிகள் ஆக்கி, வைரல் ஆக்குகிறது. இது ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய தெளிவான ஒரு பிரச்சார நிகழ்ச்சி நிரல். பலாலியில் அவர் அரைக்காற் சட்டையோடு நடந்த போதும், வடமராட்சியில் ஒரு வயோதிபப் பெண் அவரை அணைத்தபோதும், பாதுகாப்பு வேலிகளைத் தாண்டி தமிழ் மக்கள் தங்கள் பிள்ளைகளை அவரிடம் கொடுத்து செல்ஃபி எடுக்கும்போதும், அரசாங்கத்தின் டிஜிட்டல் புரமோஷன் அணி அதைக் கவர்ச்சியான பிரச்சாரப் பண்டமாக மாற்றுகிறது. இது திட்டமிட்டுச் செய்யப்படுகிறது. அதாவது தமிழ் மக்கள் மத்தியில் அனுரவை ஒரு நாயகனாகக் கட்டியெழுப்புவது என்பது திட்டமிட்டுச் செய்யப்படுகின்ற ஒரு பிரச்சார உத்தி. அதுதான் உண்மை. ஆனால் அவ்வாறு அனுரவை ஒரு நாயகனாகக் கட்டியெழுப்பும் அளவுக்கு தமிழ்த் தேசியப் பரப்பில் ஒரு வெற்றிடம் நிலவுகிறது என்பதும் அதே அளவு உண்மை.

அனுரவைப் போல தமிழ்ப் படப் பாடல்களின் பின்னணியில் நாயக நடை போட தமிழ் மக்கள் மத்தியில் தலைவர்கள் அல்லது செயல்பாட்டாளர்கள் இல்லையா? அல்லது இருப்பவர்களைக் கொண்டாட இந்தச் சமூகம் தயாரில்லையா? இப்பொழுது அரங்கில் காணப்படும் தமிழ் ஆளுமைகளில் யாரையுமே அவ்வாறு கொண்டாட முடியாத ஒரு நிலைமை ஏன் தோன்றியது?

தமிழ்த்தேசிய அரசியலானது ஒருவர் மற்றவரை வில்லன் ஆக்கிக் கொண்டிருக்க, துரோகி ஆக்கிக்கொண்டிருக்க, யாருமே கதாநாயகராக, கதாநாயகியாக மினுங்க முடியவில்லை. ஒருவர் மற்றவரை ஏற்றுக்கொள்ளாத, சந்தேகிக்கின்ற, குற்றச்சாட்டுகின்ற, ஓர் அரசியல் சூழலில், யாரும் யாரை யும் அங்கீகரிக்கத் தயாரில்லை. அரசியல் தலைவர்களாக இருந்தாலும் சரி, சமூகத் தலைவர்களாக இருந்தாலும் சரி, சமயத் தலைவர்களாக இருந்தாலும் சரி, யாரும் புக ழோடு இருக்க முடியாது. சமூகத்தில் யாரெல்லாம் துருத் திக்கொண்டு, மினுங்கிக்கொண்டு மேலெழுகிறார்களோ, அவர்கள் எல்லோரின் மீதும் விமர்சனங்கள், அவதூறுகள்.


கடந்த 16 ஆண்டுகளில் தமிழ் மக்கள் மத்தியில் எந்த ஓர் உள்ளூர் தலைவரும் சரி, மாவட்ட மட்டத் தலைவரும் சரி, தேசியமட்டத் தலைவரும் சரி தொடர்ச்சியாக ஜனவசியத்தைத் தக்க வைத்துக்கொள்ள முடியாமல் போனது ஏன்?

தமிழ்மக்கள் யார் சொன்னால் கேட்பார்கள்? யாரை வாழும் முன்னுதாரணமாகப் பார்க்கிறார்கள்? யாருமே வாழும் முன்னுதாரணமாக இல்லாத ஒரு சமூகமா இது? தியாகிகளைப் போற்றும் ஒரு சமூகத்தில் உயிருள்ள வாழும் முன்மாதிரிகள் ஒருவரும் இல்லையா?

ஒருவர் மற்றவரை சந்தேகிக்கின்ற, அல்லது அங்கீகரிக்காத ஒரு நிலைமை என்பது ஒரு சமூகத்தின் கூட்டுணர்வை, கூட்டுச் செயற்பாட்டைப் பாதிக்கும். இது கட்சிகளில் தொடங்கி, சமூக நிறுவனங்கள், ஆலய அறக் கட்டளைகள், திருச்சபைகள், பழைய மாணவ சங்கங்கள்.. என்றிவ்வாறாக முழுச்சமூகத்துக்குமான ஒரு பொது வியாதியாக மாறிவருகிறது.

சமூக வலைத்தளங்களுக்கு முற்பட்ட காலத்தில் மொட்டைக் கடிதம் இருந்தது. மல முட்டி இருந்தது. இப்பொழுது இரண்டும் இணைந்து பேக் ஐடிகளாக, முகம் காட்டா முகநூல் கணக்குகளாக மாறிவிட்டன. மல முட்டி என்பது, தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரசும் இரு துருவங்களாக இருந்த காலகட்டத்தில் இருந்த ஒரு தோற்றப்பாடு. தமது கட்சி எதிரியைத் தாக்குவதற்கு, அசிங்கப்படுத்துவதற்கு மண்பானையில் மலத்தைச் சேகரித்துக் கொண்டுவந்து அரசியல் எதிரியின் வீட்டின் முற்றத்தில் அல்லது வாசலில் பானையை உடைத்து விடுவார்கள்.

ஆயுதப் போராட்டத்திற்கு முன்னர் காணப்பட்ட இந்த மல முட்டி அரசியல் மொட்டைக் கடிதத்தோடு இணைந்து முழுச்சமூகமும் நாறும் ஒரு நிலைமை வளர்ந்து வருகிறது. ஒரே கட்சிக்குள்ளேயே இரண்டு அணிகள் ஒன்று மற்றதன் மீது மலத்தை வாரி வீசும் போது இரண்டுமே நாறுகின்றன. அண்மையில் மட்டக்





**தமிழர்கள் ஒருவர் மற்றவரை சூரன்கள் ஆக்கிக்கொண்டிருக்க முருகன்கள் வெளியில் இருந்து குதிக்கிறார்களா? விக்னேஸ்வரனுக்கும் வாகீசனுக்கும் கையில் வேலைக் கொடுத்த ஒரு சமூகம், விரைவில் அநுரவுக்கும் ஒரு வேலைக் கொடுத்து விடுமோ?**

களப்பில் சுமந்திரன் அவ்வாறான முகங்காட்டா முகநூல் பக்கங்களைக் குறித்துப் பேசியிருக்கிறார்.

முகங்காட்டா முகநூல் பக்கங்கள், தொண்டர்களை ஏவி வழக்குத் தொடுக்கும் தலைவர்கள், தனது கட்சிக்காரனை அல்லது தன்னை விமர்சிப்பவரை மடக்குவதற்கு வழக்குப் போடுவேன் என்று மிரட்டும் அரசியல்வாதிகள், தன் கட்சிக்காரனுக்கு எதிராக தென்னிலங்கை மையக் கட்சி ஒன்றின் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினரை நாடாளுமன்றத்தில் பேச வைக்கும் தமிழ் அரசியல்வாதிகள், சமூகத்தில் யாராவது மினுங்கிக் கொண்டு மேலெழுந்தால் அவர்களைக் காலால் மிதித்துச் சப்பையாக்கி விடக் காத்திருக்கும் சமூக வலைத்தள நீதிபதிகள் என்றிவ்வாறாக தமிழ்ச்சமூகம் அதன் மாண்பை இழந்து கொண்டு போகிறது.

ஒருகாலம் திட்டமிட்டு வெறுப்பர்களை உற்பத்தி செய்த, வெறுப்புப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்ட, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நடவடிக்கைகளில் இப்பொழுது மாற்றம் தெரிகிறது. ஆனால் உள்ளதில் பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சியோ நாறிக் கொண்டிருக்கிறது.

சிங்கள நாடாளுமன்ற உறுப்பினராகிய தயாசிறீயை, சிறீதரனுக்கு எதிராக பாராளுமன்றத்தில் பேசவைத்தது யார் என்பது எல்லோருக்கும் தெரியும். தனது உட்கட்சி முரண்பாட்டை கையாள்வதற்கு இவ்வாறு தென்னிலங்கை மையக் கட்சி ஒன்றின் சிங்கள பாராளுமன்ற உறுப்பினரைக் கருவியாகக் கையாள்வது என்பது தமிழ்த் தேசிய அரசியல் எங்கே வந்துநிற்கிறது என்பதைக் காட்டுகிறது. அதேசமயம் சிறீதரன் அரசியல மைப்பு பேரவையில் படைப் பிரதானிகளுக்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறார் என்ற விடயம் அவரைப் பொது வெளியில் அம்பலப்படுத்த, அவமானப்படுத் தத் தேவையான வாய்ப்புகளை வழங்குகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழரசுக் கட்சிகுள் தீர்க்கப்படாத உட்கட்சி முரண்பாடு இடக்கிடை நாடாளுமன்றத்திலும் அடிக்கடி ஊடக ஒலிவாங்கிகளுக்கு முன்னரும் அசிங்கமான விதங்களில் வெளிப்படுகிறது. கட்சியின் கூட்டுணர்வை, சகோதரத்துவத்தைக் கவனத்தில் எடுத்து உட்கட்சிப் பிரச்சனையை உட்க்கட்சிக்குள்ளேயே தீர்க்க முடியாத அளவுக்கு கட்சி பலவீனமாக உள்ளது. தமிழரசுக் கட்சிக்குள் இப்பொழுது பலமான தலைவர்கள் இல்லை என்பதுதான் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலான யதார்த்தம். சுமந்திரனாலும் கட்சியைத் தனது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. சிறீதரனாலும் முடியவில்லை.

யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் தனக்கென்று நிலையான வாக்கு வங்கியைக் கொண்டிருப்பவர் சிறீதரன். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்குடா நாட்டுக்குள் தமிழரசுக் கட்சிக்கு ஆசனம் கிடைக்கவில்லை. தேர்தல் தொகுதி என்ற அடிப்படையில் கிளிநொச்சியில் சிறீதரன் பெற்ற வெற்றியும் இல்லையென்றால் தமிழரசுக் கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் ஆசனமே இல்லை. எல்லாவிதமான குற்றச்சாட்டுகளுக்கும் அப்பால், கிளிநொச்சியில் இப்பொழுதும் சிறீதரனுக்கு நிலையான வாக்கு வங்கி உண்டு. யாழ்குடா நாட்டில் மட்டுமல்ல, தமிழரசு கட்சிக்குள் நிலையான வாக்கு வங்கியைக் கொண்ட ஒருவர் அவர். தமிழரசுக் கட்சிக்குள் அவ ரைத் தோற்கடித்தாலும், கிளிநொச்சியில் அவரைத் தோற்கடிக்கலாமா என்பதனை இனிமேல்தான் பரிசோ திக்க வேண்டும்.

ஆனால் சிறீதரனை அவமானப்படுத்தி அவருடைய மாவட்டத்துக்குள்ளேயே முடக்க இன்றுவரை சுமந்திரனால் முடியவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளிலும் கட்சிக்குள் சுமந்திரன் தன்னுடைய நிலையை ஒப்பீட்டளவில் பலப்படுத்தி வந்தாலும் வாக்காளர்கள் மத்தியில் அவர் பலமாக உள்ளாரா என்பதை இனிமேல்தான் பரிசோதிக்க வேண்டும்.

இந்த முரண்பாடுகளின் மத்தியிலும் தமிழரசுக் கட்சி பலமாக உள்ளது என்ற ஒரு தோற்றம் வெளியே தெரிகிறது. ஏன் தெரியுமா? அது வெல்லக்கூடிய கட்சி என்று அந்தக் கட்சி உறுப்பினர்கள் நம்பி அந்தக் கட்சிக்குள் ஒட்டிக் கொண்டிருப்பதுதான். நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட, வடக்குக் கிழக்காக கீழ்மட்ட வலையமைப்பை கொண்ட ஒரு கட்சி அது. வெல்லக்கூடிய குதிரை என்பதால் அநேகர் கட்சிக்குள் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 75 ஆண்டுகளிலும் அந்தக் கட்சியில் வாக்காளர்களைப் பிரதிபலிக்கும் தலைவர்களும் கொழும்பை அனுசரித்துப் போகும் தலைவர்களும் இருந்ததுண்டு. இந்த இரண்டு பண்புகளினதும் கலப்புத்தான் தமிழரசுக் கட்சி. இந்த இரண்டு போக்குகளும் ஒன்று மற்றதை அனுசரித்துப் போனமைதான் கட்சியின் பலம். ஆனால் இப்பொழுது இந்த இரண்டு போக்குகளும் முரண்படும் ஒரு நிலை தோன்றியிருக்கிறது. இது கட்சியை எங்கே கொண்டு போய்விடும்?

தமிழரசுக் கட்சி சிதையுமாக இருந்தால் அந்த வெற்றிடத்தை நிரப்ப தமிழ்த் தேசியப் பேரவையால் முடியுமா? அது இப்பொழுதுவரை ஒரு பிரதான நீரோட்டக் கட்சிக்குரிய பண்புகளோடு காணப்படவில்லை. மாறாக மாற்று நீரோட்டக் கட்சியாகத்தான் காணப்படுகிறது.

இவ்வாறு தமிழ் தேசிய பரப்பில் கட்சிகளுக்குள்ளும் கட்சிகளுக்கு இடையிலும் ஒருவர் மற்றவரை வில்லன் ஆக்கும் மோதல்களால், தமிழ்த் தேசியப் பரப்பில் யாருமே கதாநாயகராக எழ முடியவில்லை. அந்த வெற்றிடத்தில் அரச பலத்தோடு, அரச வளங்களைப் பிரயோகித்து அனுர நாயகனாக இறக்கப்படுகிறார். கடந்த வாரம் முருகனாகப் பதவி உயர்த்தப்பட்டிருக்கிறார். அதாவது தமிழர்கள் ஒருவர் மற்றவரை சூரன்கள் ஆக்கிக் கொண்டிருக்க முருகன்கள் வெளியில் இருந்து குதிக்கிறார்களா? விக்னேஸ்வரனுக்கும் வாகீசனுக்கும் கையில் வேலைக் கொடுத்த ஒரு சமூகம், விரைவில் அனுரவுக்கும் ஒரு வேலைக் கொடுத்து விடுமோ ? ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்’ - நூல் எழுப்பும் கேள்விகள் -

சமுத்திரன்

கொழும்பில் இயங்கும் மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்தின் வெளியீடாகஅண்மையில் எட்டுக் கட்டுரைகளின் தொகுதியாக வெளிவந்துள்ள ‘தமிழ் தேசியவாத அரசியலின் எதிர்காலம்” நூலில் இலங்கையின் வடக்குக் கிழக்கின் தமிழ்த் தேசியவாதஅரசியலின் தற்போதைய நிலைமைகளை எதிர்காலநோக்கில் ஆராய்கிறார் வீரகத்தி தனபாலசிங்கம். நூலாசிரியர் நீண்டகால அனுபவமும் விமர்சனப் பார்வையும் கொண்ட பத்திரிகையாளர்,எழுத்தாளர் மற்றும் பொதுவெளிப் பேச்சாளர். முன்னுரையில் ஈழத் தமிழ்த் தேசியவாத அரசியலின் இன்றையநிலை பற்றி அவருடைய கணிப்பை அக்கறையுடன் பதிவிடுகிறார்.

‘இலங்கைஅரசியல் வரலாற்றில் இனத்துவ உறவுகளைப் பொறுத்தவரை எல்லைக் கோடாகஅமைந்த 1983 ஜூலைவன்முறைக்குப் பின்னர் 42 வருடங்களையும் போர் முடிவுக்குப் பின்னரான 16 வருடங்களையும் கடந்துவந்தநிலையில் இன்றுதமிழர்களின் அரசியல் இருப்பு கேள்விக்குறியாக ... இடர்மிகுகட்டத்தில் வந்துநிற்கிறது. தமிழர் அரசியல் குறித்துநாம் ஆழ்ந்து ஆய்வறிவு நிலைப்பட்டுச் சிந்திக்கவேண்டிய முட்டுச் சந்தில் நிற்கிறோம்.”

இந்தத் தொகுப்புபிரதானமாக இலங்கை இனத்துவ அரசியல் சூழலில் வடக்கு, கிழக்கின் தமிழ் சமூகத்தை மையப்படுத்திச் சமீப தசாப்தங்களின் வரலாற்றுப் பின்னணியில் கடந்த 16 வருடகாலஅரசியல் போக்குகளைஅலசிஎதிர்காலம் தொடர்பான சில கேள்விகளை எழுப்புகிறது. ஆயினும் தமிழ்த் தேசியவாதத்தின் கருத்தியல்சார் உள்ளடக்கம் பற்றியவிளக்கங்கள்,மற்றும் விவாதங்கள் இந்தத் தொகுப்பின் பேசுபொருட்களில் அடங்கவில்லை. தேசிய இனப் பிரச்னையை பொறுத்தவரை ஓர் அரசியல் தீர்வின் அவசியத்தையும் சாத்தியப்பாட்டையும் மனதில் கொண்டுஅரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளையும் அவற்றிடையில் எழுந்துநிற்கும் முரண்பாடுகளையும் சுட்டிக்காட்டிவிமர்சிக்க முற்படுகிறார் நூலாசிரியர்.

ஆயினும், பன்மைத்தன்மையுடைய இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையின் முழு உள்ளடக்கத்தின் அம்சங்களில் ஒன்றான வடக்கு, கிழக்கு தமிழ் சமூகத்தின் அரசியல் இருப்பே நூலின் மையக் குவியமாகப்படுகிறது. இதனால் இந்தக் கட்டுரைகள் ஒரு குறிப்பிட்ட அரசியல் பரப்பைப் பிரதானப்படுத்தி எழுதப்பட்டிருக்கின்றன என்று எண்ணத் தோன்றுகிறது.

உள்நாட்டுப்போர் முடிவுக்குவந்து 16 வருடங்கள் கழிந்துவிட்டநிலையிலும் எதிர்காலம் குறித்துத் தமிழ் மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய எந்தவிதமான அறிகுறியையும் இலங்கையின் அரசாங்கங்கள், தற்போதைய அரசாங்கம் உட்பட, வெளிப்படுத்தாத சூழலில் தமிழ் அரசியல் தலைமைத்துவம் பற்றிய தனது திடமான அவதானிப்பையும் ஏமாற்றத்தையும் முதலாவது கட்டுரையிலேயே பின்வருமாறு அவர் பதிவிடுகிறார்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான இன்றைய காலப் பகுதியில் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலவரங்களுக்கு இசைவான முறையில் நடைமுறைச் சாத்தியமான கொள்கைகளுடனும் அணுகுமுறைகளுடனும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை விவேகமான முறையில் அடுத்த கட்டத்துக்கு நகர்த்தக்கூடியஅரசியல் தலைமைத்துவம் தமிழர்கள் மத்தியில் இன்று இல்லைஎன்பதுபெரும் கவலைக்குரியது.

முட்டுச்சந்தில் நிற்கும் தமிழ்த் தேசியவாத அரசியலுக்கு ஒரு மாற்றுவழியைத் தேடும் ஆற்றலுள்ளதமிழ்த் தலைமைத்துவம் தென்படாத சூழலில் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் ஜனதா விமுக்தி பெரமுன ( ஜே.வி.பி.) தலைமையிலானதேசிய மக்கள் சக்திக்கு வடக்கு, கிழக்கில் கணிசமானஅளவில் வாக்குகளை வழங்கி அந்த அமைப்பின் ஏழு அங்கத்தவர்களை வெற்றிபெறச் செய்துள்ளார்கள். இது தமிழ் பாராளுமன்ற அரசியலில் ஒரு தன்மைசார் திருப்பத்தின் அறிகுறியா அல்லது வழமையான போக்கிலிருந்து ஒரு தற்காலிக விலகலா?

தங்களை இதுகாலவரை பிரதிநிதித்துவப்படுத்தி வந்த தமிழ்த் தேசியவாதக் கட்சிகளின் செயல்பாடுகளின்மீதான வெறுப்பின் காரணமாவே தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியின் பக்கம் திரும்ப நிர்ப்பந்திக்கப் பட்டார்கள் என வாதிடும் தனபாலசிங்கம், மக்களின் அந்தவெறுப்பிற்கானஆதாரங்களையும் பல இடங்களில் முன்வைக்கிறார். இந்தவிளக்கம் பற்றிமேலும் ஆராய முன் இதனுடன் தொடர்புள்ள சில அம்சங்கள் பற்றி அவர் பகிர்ந்துள்ள அவதானிப்புகளை அலசுதல் பயனளிக்குமென்று நம்புகிறேன்.

இந்தவகையில் முக்கியத்துவம் பெறும் விடயங்களில் ஒன்று இலங்கையின் யாப்பின் பதின்மூன்றாம்




திருத்தத்தின் தற்போதையஅரசியல் தராதரம், தமிழ்க் கட்சிகளிடையே இது பற்றிநிலவும் முரண்பாடுகள் மற்றும் இதனுடையநடைமுறையாக்கச் சாத்தியப்பாடு. இது பற்றிப் பார்த்தபின் மற்றவிடயங்களுக்குவருவோம்.

அரசியல் தீர்வைக் காண்பதற்கு உள்நாட்டில் முன்னெடுக்கப்பட்ட எந்தவொரு முயற்சியுமே வெற்றி பெறாத வரலாற்றுப் பின்னணியில் உள்நாட்டுப் போர் தொடரும் சூழலில் இந்தியாவின் தலையீட்டின் விளைவாகச் சட்டமாக்கப்பட்ட 13ஆம் திருத்தம் மற்றும் அதுவழங்கும் மாகாண சபை முறை தொடர்பாகப் பிரதானதமிழ்த் தேசியவாத அரசியல் கட்சிகளுக்கிடையிலானமுரண்பாடுகளும் பிளவுகளும் ஏற்கனவே அரசியல் ரீதியில் பலவீனமடைந்த நிலையிலுள்ள தமிழ் சமூகத்தை மேலும் பாதித்துள்ளது. இன்றைய சூழலில் 13ஆம் திருத்தத்திற்கு எதிராகப் போராடிய ஜே.வி.பி. தலைமையிலுள்ள தற்போதைய இலங்கை அரசாங்கத்துடன் நல்லிணக்கத்தை பேணுவதில் கண்ணாயிருக்கும் இந்திய அரசாங்கமும் அதன் நடைமுறையாக்கலில் ஆர்வத்தைக் காட்டுவதாகத் தெரியவில்லை.

இந்தப் பின்னணியில் மாகாண சபை முறையை முற்றாக நிராகரிக்கும் தமிழ்த் தேசியவாத அரசியலை விமர்சிக்கும் நூலாசிரியர் 13ஆவது திருத்தம் போதுமானது அல்ல ஆயினும் தமிழ் அரசியல் சமுதாயம் அதன் வரலாற்றில் மிகவும் மோசமாகப் பலவீனமடைந்து சிதறுபட்டிருக்கும் சூழ ில் அதுவும் இல்லாமல் போனால் நிலைமைஎன்னவாகும் எனும் கேள்வியை எழுப்புகிறார்.

மாகாண சபை முறையை மக்களின் உரிமைகளையும் நலன்களையும் முன்னெடுக்கும் அணிதிரட்டல் அரசியலுக்கு உதவும் வழிமுறையாகப் பயன்படுத்த முடியாதா எனும் கேள்வி எழுகிறது. முடியும் என நான் நம்புகிறேன்.

ஆனால், இப்போதைய தமிழ்க் கட்சிகளால் அதைச் சாதிக்கமுடியும் என நான் நம்பவில்லை என்பது தொடர்பாக கடந்தகாலத்தில் எழுதியுமுள்ளேன்.

இலங்கையின் ஒற்றையாட்சி முறை நீக்கப்பட்டு ஒரு புதிய அரசியல் அமைப்பின் கீழ் சமஷ்டி முறையிலான ஓர் எதிர்காலத் தீர்வைக் கோரி நிற்கும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, மாகாண சபைகள் முறையை முற்றாக நிராகரிக்கிறது. சமஷ்டியை ஆதரிக்கும் தமிழரசுக் கட்சி மாகாண சபைகளை முற்றாக நிராகரிக்கவில்லை. தமிழ்க் கட்சிகளால் ஒன்றிணைந்த நிலைப்பாடொன்றை முன்வைப்பதற்குக்கூட முடியவில்லை.

13ஆவதுதிருத்தம் வழங்கும் குறைந்தபட்ச அதிகாரப் பகிர்வைக் கூட இதுகாலவரை நடைமுறைப்படுத்தாமல் இருக்கும் இலங்கை அரசாங்கங்களிடமிருந்து சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை பெறமுடியுமா? வெறுமனே இந்தியாவிடமும் சர்வதேச சமூகத்திடமும் கோரிக்கையை விடுப்பதன் மூலம் மாத்திரம் அதை அடைந்துவிடலாமா? தற்போதைய சூழலில் 13 ஆவது திருத்தத்தின் நடைமுறையாக்கலில் ஆர்வம் காட்டத் தயங்கும் இந்திய ஆட்சியாளரிடமிருந்து அதற்கும் மேலான ஒரு தீர்வில் அக்கறையை எதிர்பார்க்கலாமா? ‘13ஆவது திருத்தத்தைமுழுமையாகநடைமுறைப் படுத்தினால் இலங்கை இதுவரை காணாத மிகப்பெரிய இனக்கலவரம் மூளும் என்றுசிங்கள இனவாதிகள் இப்போதும்கூட பேசுகிறார்கள்’ எனும் கசப்பான செய்தியையும் நினைவூட்டும் நூலாசிரியர், புதிய யாப்பு வரும் பட்சத்தில் அது சமஷ்டியை உள்ளடக்குமா? எனக் கேட்கிறார். அவர் எழுப்பும் கேள்விகள் நியாயமானவை. அவை வேறு கேள்விகளையும் தூண்டுகின்றன.

உதாரணமாக, இந்தக் கேள்விகளின் தொடராகஎழும் இன்னொருகேள்வியை இங்குகுறிப்பிடுதல் அவசியம். தமிழ் மக்களின் கோரிக்கைகளையும் அவற்றின் நியாயப்பாட்டினையும் சிங்களமக்களிடம் எடுத்துச் செல்லும் வழிவகைகள் எவை? இந்தக் கேள்வியை நான் எழுப்புவது இதுதான் முதல் தடவையல்ல. நான் இந்தக் கேள்வியை எழுப்பிய முதலாவது தமிழருமல்ல. இது போன்ற கேள்விகளை வடக்கு, கிழக்கில் தமிழ் - முஸ்லிம் அரசியல் உறவு பற்றியும் எழுப்பவேண்டிய நிலையில் உள்ளோம். வடக்கு, கிழக்குக்கு விசேட முக்கியத்துவம் கொடுக்கும் இந்தத் தொகுப்பின் கட்டுரைகளில் இந்த விடயம் விடுபட்டிருப்பது வருத்தத்திற்குரிய குறைபாடாகும்.

ஒரு முதற்படியாக, இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்கும் பொதுவான பதின்மூன்றாம் திருத்தம் முழுமையாக நடைமுறையாக்கப்படுமாயின் எல்லாமாகாணங்களும் நன்மைபெறமுடியும் போன்ற ஒரு கோரிக்கையைஎல்லா இனங்களுக்குமிடையிலான புரிந்துணர்வுக்கும் செயற்பாடுகளுக்கும் உதவக்கூடிய வகையில் உருவாக்கமுடியாதா? இத்தகைய ஓர் அணுகுமுறை நிலம் மற்றும் இயற்கைவளங்களின் உரிமைகள் மற்றும் அவற்றின் நிலைபெறு பயன்பாடு தொடர்பானஅதிகாரப் பகிர்வுமற்றும் மனித மேம்பாட்டிற்கு முன்னுரிமை கொடுக்கும் அபிவிருத்தி போன்ற விடயங்களைப் பேசுபொருட்களாக முன்னெடுக்க உதவமாட்டாதா? அந்தத் திருத்தத்தின் குறைபாடுகளையும் மேலும் தெளிவாக மக்களுக்குவெளிப்படுத்தும் சந்தர்ப்பம் கிடைக்கலாம் அல்லவா? இதற்கூடாக ஒரு தொடர்புவழியைத் திறக்கமுடியாதா?

புலம்பெயர்வும் வடக்குக் கிழக்கின் இனம் சார்-சனத்தொகையியலும் இனத்துவப் புவியியல்சார், மாற்றங்களும் முக்கியத்துவம் பெறும் இன்னொரு விடயமாகும். இது தொடர்பாகச் சில அவதானிப்புகளைப் பதிவுசெய்திருக்கிறார் தனபாலசிங்கம். முக்கியமாக ‘மக்களும் நிலமும் இல்லாமல் எந்தத் தேசியவாதத்தையும் பாதுகாக்கமுடியாது’ எனும் வாதத்தின் அடிப்படையில் தனது கருத்துக்களை முன்வைத்திருக்கிறார். அதாவது வடக்கு, கிழக்கில் தொடர்ந்தும் வாழ்ந்தால் தமக்கும் தமதுசந்ததிகளுக்கும் வளமானஎதிர்காலம் இருக்கும் என்ற நம்பிக்கை இல்லாவிட்டால் புலப்பெயர்வு தொடர்வதைத் தவிர்க்கமுடியாது. தற்போதைய தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கே அந்த நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ்த் தேசியவாதக் கட்சிகளிடம் வடக்கு, கிழக்கின் சமூகமுன்னேற்றத்தை நோக்காகக் கொண்ட அபிவி ருத்திக் கொள்கையோ, வேலைத்திட்டமோ இருக்க வில்லை. இது அந்தக் கட்சிகளின் தலைமைகளுக்கும் மக்களுக்குமிடையிலானவெளியை, தொடர்பின்மையைக் காட்டுகிறது. ஒக்ரோபர் 2013இல் இடம்பெற்ற முதலாவது வடமாகாணசபைத் தேர்தலில் பெரும் வெற்றிஈட்டிஐந்துவருடங்களுக்குஅதிகாரத்தைத் கைப்பற்றியிருந்ததமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போரினால் பாதிக்கப்பட்டமக்களின் சமூக-பொருளாதாரமுன்னேற்றத்திற்குமுன்னுரிமைகொடுக்கும் ஒருகொள்கைஅடிப்படையிலானசெயற்பாட்டுத் திட்டத்தைக் கொண்டிருக்கவில்லை. இன்றும்கூடப் பொதுவாகமக்களின் சமூக-பொருளாதாரமுன்னேற்றம் பற்றியகொள்கைசார் விடயங்கள் தமிழ்த் தேசியவாதக் கட்சிகளின் அரசியலில் ஒருமுக்கியபேசுபொருளாக இருப்பதாகத் தெரியவில்லை.

வடக்குக் கிழக்கின் இனம்சார் புவியியல் மாற்றங்களின் தற்போதையநிலைமையைச் சமீபத்தில் வெளிவந்த இலங்கைசனத்தொகைக் கணிப்புதரும் புள்ளிவிபரங்களின் உதவியுடன் ஆராய்தல் அவசியம். நீண்டகாலப் போர்,புலப்பெயர்வுமற்றும் அரசநிலத்தில் தொடரும் குடியேற்றத் திட்டங்கள் எல்லாவற்றினதும் விளைவுகள் தேசிய இனப் பிரச்னையின்மீது தன்மைசார்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் கலாச்சார அவுஸ்திரேலியாவில் வெறுப்பு பேச்சு சட்டத்தின் எதிர்வினை!

ஐங்கரன் விக்கினேஸ்வரா




அவுஸ்திரேலியாவில் வெறுப்பு பேச்சை கட்டுப்படுத்த புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்த வருட இறுதியில் டிசம்பர் 14இல் அவுஸ்திரேலியாவின் பொண்டி கடற்கரை பகுதியில் யூதர்களின் ஹனுக்கா விழாவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 15 பேர் உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து, வெறுப்பு பேச்சு மற்றும் வன்முறையைத் தூண்டும் செயல்களை கட்டுப்படுத்தும் புதிய சட்டங்களை அரசாங்கம் கொண்டு வந்துள்ளதாக பிரதமர் அந்தோணி அல்பனீஸ் அறிவித்துள்ளார்.





**வெறுப்பு பேச்சை கட்டுப்படுத்தும் புதிய சட்டத்தின் உச்ச விளைவாக அவுஸ்திரேலியாவில் செயல்படும் ஒரு நாசி அமைப்பான 'National Socialist Network' (*NSN*), தனது அமைப்பைக் கலைப்பதாக அறிவித்துள்ளது.**

பொண்டி தாக்குதல், இஸ்லாமிய தீவிரவாத அமைப்பால் தூண்டப்பட்டதாக சிட்னி பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தியாவில் இருந்து குடிபெயர்ந்த 50 வயது சாஜித் அக்ரம் மற்றும் அவரது 24 வயது மகன் நவீத் அக்ரம் தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. சாஜித் பொலிஸாரால் உடனடியாக சுட்டுக் கொல்லப்பட்டார், நவீத் பல குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

வெறுப்பு பேச்சு புதிய சட்டத்தில் முக்கிய பல விடயங்கள் குறித்து தொடர்ந்து நாடளாவிய ரீதியாக விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. வெறுப்பு பேச்சு மற்றும் வன்முறையை ஊக்குவிப்பவர்களை எளிதில் குற்றம் சாட்டும் வகையில் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. அத்துடன் அதிகமான தண்டனைகள் விதிக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

மேலும் வெறுப்பு பேச்சில் ஈடுபடும் அமைப்புகளை குறிவைக்கும் தனி நடைமுறை அமுல்படுத்தப்படும். இந்த சட்டத்தால் பல்லின கலாச்சார நாட்டின் அடிப்படை மனித உரிமைகள் பாதிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

ஆனால் யூத அமைப்புக்கள், அவுஸ்திரேலிய அரசு பல ஆண்டுகளாக யூத விரோத தாக்குதல்களை புறக்கணித்துள்ளது என பாதிக்கப்பட்ட குடும்பங்கள் சார்பாக குற்றம் சாட்டியுள்ளனர். பொண்டி கடற்கரை தாக்குதலில் பத்து வயது மடில்டா உள்ளிட்ட பலர் உயிரிழந்ததால், நாடு முழுவதும் துயரமும் கோபமும் ஏற்பட்டது. அதேவேளை சிட்னி மற்றும் மெல்போர்னில் நடந்த யூதர்களை குறிவைத்த தீக்கிரை சம்பவங்கள் காரணமாக, அவுஸ்திரேலியா கடந்த ஆகஸ்டில் ஈரான் நாட்டின் தூதுவரை வெளியேற்றியதும் குறிப்பிடத்தக்கது.

**கடுமையான துப்பாக்கி சட்டங்கள்:**

அவுஸ்திரேலியாவில், பொதுமக்களிடம் இருக்கும் அதிகப்படியான துப்பாக்கிகளை, வாங்கி அழிக்கும் மசோதா ஒன்று நிறைவேறி உள்ளது.

பிரதமர் அந்தோணி அல்பனீஸ், துப்பாக்கி பயன்பாட்டிற்கான சட்டங்களை கடுமையாக்க முடிவு செய்துள்ளார்.

அரசு நிதியுதவியுடன் மக்களிடமிருந்து துப்பாக்கிகளை வாங்கி அழிப்பது, ஒருவருக்கு நான்கு துப்பாக்கிகள் மட்டுமே அனுமதி என, பல்வேறு கட்டுப்பாடுகளை கொண்ட மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது. இதனுடன், இனம், மதத்திற்கு எதிரான வெறுப்பு பேச்சுகளை தூண்டுவதற்கு எதிராகவும் மசோதா தாக்கல் செய்யப்பட்டு நிறைவேறியது.

இந்நிலையில் புதிய சட்டம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொதுமக்களும் கருத்துச் சுதந்திரம் தொடர்பான கவலைகளை வெளிப்படுத்தியுள்ளனர். புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டால், பொதுக் கூட்டங்களைத் தடுக்கக் காவல்துறைக்குக் கூடுதல் அதிகாரம் கிடைக்கக்கூடும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

சிட்னியில் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் வகையில், நியூ சவுத் வேல்ஸ் அரசு, துப்பாக்கி சட்டங்களை கடுமைப்படுத்த மாநில சட்டமன்றமும் உத்தரவிட்டுள்ளது. பொண்டி படுகொலைகளை தொடர்ந்து அவுஸ்திரேலிய தேசிய பொலிஸார், இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்புடைய உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வலையமைப்புகளை தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

இந்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால் அவுஸ்திரேலியாவில் வெறுப்பு பேச்சு மற்றும் மத அடிப்படையிலான வன்முறையை கட்டுப்படுத்தும் முக்கிய முன்னேற்றமாக அமையும் என்று ஆளும் அரசு தெரிவித்துள்ளது.

**பிரதமரின் கடும் போக்கு:**

புதிய சட்டங்களின்படி வெறுப்பு, பிரிவினை மற்றும் தீவிரவாதக் கருத்துகளை பரப்புபவர்களையும் குறிவைக்கும் என அவுஸ்திரேலிய பிரதமர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். வெறுப்புப் பேச்சைக் கட்டுப்படுத்த தனது அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பனீஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் வெறுப்பைப் பரப்புபவர்களுக்கு விசாக்களை ரத்து செய்யவோ அல்லது மறுக்கவோ உள்துறை அமைச்சருக்கு புதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. யூத எதிர்ப்பை தடுக்கவும், எதிர்த்துப் போராடுவதையும், தகுந்த முறையில் பதிலளிப்பதையும் உறுதிசெய்ய ஒரு புதிய பணிக்குழு நிறுவப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆனாலும் லிபரல் எதிர்க்கட்சியும் பசுமைக் கட்சியும் கூட்டாக இந்த மசோதாவை ஆரம்பத்திலேயே எதிர்த்தன. பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்கவும், நாட்டின் பாதுகாப்பு மற்றும் அமைதியான இருப்புக்காகவே அரசாங்கம் 'யூத எதிர்ப்பு, வெறுப்பு மற்றும் தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடும் மசோதா 2026'ஐ அறிமுகப்படுத்தி உள்ளது.

இருப்பினும் இந்த புதிய மசோதா கருத்து சுதந்திரத்திற்கு இடையூறாக இருக்கலாம் என்று பசுமைக் கட்சியும் கூட்டணி அரசாங்கமும் கூறியுள்ளன.

இதற்கிடையில், கடுமையாக எதிர்க்கப்பட்ட 'இன இழிவுபடுத்துதல்' தொடர்பான சட்டப் பிரிவு இப்போது நீக்கப்பட்டுள்ளது. புதிய திருத்திய மசோதாக்கள் நாடாளுமன்றத்தில் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளன.

இருப்பினும், பசுமை (கிரீன்ஸ்) கட்சித் தலைவர் லாரிசா வாட்டர்ஸ் துப்பாக்கி கட்டுப்பாட்டுச் சட்டங்களுக்கு தனது ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால் மற்ற சட்டங்கள் மேலும் விவாதிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தி உள்ளார்.



**கடும்போக்கில் யூத அமைப்புகள்:**

ஆனால் அவுஸ்திரேலியா வெறுப்புப் பேச்சு சட்டத்தில் கடுமையான மாற்றங்களை கொண்டுவர பல்வேறு யூத அமைப்புகளும் கோரியுள்ளன.

குறிப்பாக இன வெறுப்பைத் தூண்டுவதற்கு எதிரான புதிய சட்டத் திருத்தங்களில் உள்ள ஒரு குறிப்பிட்ட பாதுகாப்பு விதியை நீக்குமாறு அந்நாட்டின் முதன்மை யூத அமைப்பின் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் ஆளும் தொழிற்கட்சியின் புதிய சட்டத்தின் கீழ், கல்வி அல்லது மத விவாதங்களின் போது மத நூல்களிலிருந்து நேரடியாக மேற்கோள் காட்டிப் பேசுபவர்களுக்குத் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்க முன்மொழியப்பட்டுள்ளது. இந்தச் சலுகையையும் அகற்ற வேண்டும் என்று அவுஸ்திரேலிய யூதர்களின் நிர்வாகக் குழுவின் தலைமை நிர்வாகி பீட்டர் வெர்தைம் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆனால் இந்தக் கோரிக்கை அவுஸ்திரேலியாவின் பல்லின நல்லிணக்கம் மற்றும் மத சுதந்திரத்திற்கு இடையிலான விவாதத்தை மீண்டும் முன்னெடுத்துள்ளது. இதேவேளை வெறுப்பு குழுக்களை தடை செய்ய அரசு கடுமையான நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் புதிய சட்ட சூழ்நிலை அறிமுகமாகிய சில நாட்களில் , அவுஸ்திரேலியாவில் செயல்படும் பல சக்திவாய்ந்த நவ நாசிச அமைப்புகள் கலைக்க முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சட்டம் வெறுப்புக் குழுக்களின் தலைவர்களுக்கு 15 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும், அத்தகைய அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு ஏழு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் விதிக்க அதிகாரம் அளிக்கிறது.

**எதிர்கட்சிக்குள் பிளவு:**

அவுஸ்திரேலிய எதிர்கட்சியான லிபரல் கட்சியின் தலைமைப் பதவியில் சுசன் லே நியமிக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைவதற்கு முன்னரே, கட்சிக்குள் தற்போது நிலவும் தலைமைத்துவ பதற்றங்கள் அவுஸ்திரேலிய அரசியலில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்துள்ளன.

குறிப்பாக, வெறுப்பு பேச்சு சட்டங்கள் தொடர்பான கொள்கை முரண்பாடுகள் கட்சிக்குள் ஒரு ஆழமான நிலையற்ற தன்மையை உருவாக்கியுள்ளன. இத்தகைய சூழலில், உட்கட்சி நிலைத்தன்மையை மீளக் கட்டியெழுப்புவது என்பது வெறும் நிர்வாக முடிவு மட்டுமல்ல, அது கட்சியின் எதிர்கால இருப்பைத் தீர்மானிக்கும் ஒரு மூலோபாயத் தேவையாக இருக்கிறது.

தற்போது, சுசன் லே மிதவாத அணி மற்றும் மத்திய அணியின் பெரும் பகுதியினரின் ஆதரவுடன் தனது பதவியைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார். மிதவாத அணியினரின் தற்போதைய நிலைப்பாடு லேவின் தலைமைக்கு ஒரு பாதுகாப்பு வளையமாகச் செயல்படுகிறது.

இதற்கிடையில் இன வெறுப்பை விதைக்கும் எந்தவொரு அமைப்பும் தொடர நாட்டில் அனுமதிக்கப்படாது என்று உள்துறை அமைச்சர் டோனி பேர்க் கடும் தொனியில் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த் தேசிய அரசியலின்...

மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன எனும் கருத்தை நான் கடந்தபலவருடங்களாக வலியுறுத்திவந்துள்ளேன்.

இலங்கையில் 2022 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சி மற்றும் அதுதொடர்பான தமிழ்த் தேசியவாத எதிர்வினைபற்றி நூலில் காணப்படும் குறிப்புகள் கவனிக்கப்படவேண்டியவை. இலங்கையின் மிகப் பாரதூரமானபொருளாதாரநெருக்கடிக்கு மத்தியில் இடம்பெற்ற பல்லினத்தன்மைமிக்க மக்கள் கிளர்ச்சியை உதாசீனம் செய்ததமிழ்த் தேசியவாதக் கட்சிகள் அந்தநெருக்கடிதமிழ் மக்களுக்கு ஒரு பிரச்னைஅல்லஎனக் கூறியதுஅவற்றின் வர்க்கத் தன்மையையும் குறுகிய இனத்துவமையப் பார்வையையும் காட்டியது. இதைமேலும் பறைசாற்றுவதுபோல் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் தனவந்தர்களை இலங்கையில் சுதந்திரமாக முதலீடுசெய்யஅனுமதித்தால் பொருளாதாரப் பிரச்னைக்கு இடமிருக்காது என்று பாரளுமன்றத்தில் பேசினார்கள் சிலதமிழ் அரசியல்வாதிகள் எனும் தகவலையும் பதிவிடுகிறார்.

எனதுஅபிப்பிராயத்தில் அந்தமக்கள் கிளர்ச்சிசிங்கள சமூகத்தில் பலமட்டங்களில் செயற்படும் முற்போக்குக் குழுக்களை இனம் காணஉதவியது. ஆனால், அவற்றுடன் தேசிய இனப்பிரச்னை தொடர்பான ஒரு தொடர்புவழியை வளர்த்தெடுக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை வடக்கு, கிழக்குத் தமிழ் சமூகம் நன்குபயன்படுத் தத் தவறிவிட்டதுஎனத் தெரிகிறது.

தமிழ்த் தேசியவாதக் கட்சிகளின் செயற்பாடுகளின் மீதானவெறுப்பின் காரணமாகவேதேசிய இனப் பிரச்னைக்கு எதுவிததீர்வையும் முன்வைக்காத ஜே.வி.பி. தலைமையிலான தேசியமக்கள் சக்தியைதமிழ் மக்கள் கடந்தபொதுத் தேர்தலில் ஆதரித்து வாக்களித் தார்கள் எனும் விளக்கத்தில் நிறையநியாயமுண்டு. எனினும் தேசியமக்கள் சக்தியை பரந்தளவில் ஆதரித் தமைக்கு இந்தஏமாற்றம் நிறைந்தவெறுப்புடன் வேறு காரணங்களும் இருக்கவில்லையாஎன்றகேள்வியும் எழுகிறது.

இந்தக் காரணங்கள் தமிழ் சமூகத்தின் உள்ளார்ந்த பிரிவுகளின் தேவைகளின் அவசியத்தைப் பொறுத்து வேறுபடலாம். உதாரணமாக, வாழ்வாதாரப் பாதுகாப்பு, தமிழ் சமூகத்திற்குள் நிலவும் வர்க்க, சாதி, பால் சார்ந்த பாதுகாப்பின்மை, பாகுபாடு, அடக்குமுறை போன்ற காரணங்கள். அபிவிருத்திமற்றும் சமூகப் பாதுகாப்புதொடர்பாக தேசியமக்கள் சக்தியின் தேர்தல் வாக்குறுதிகள் சிங்களமக்கள் மத்தியில் எடுபட்டது போன்றுதமிழ் மக்களுக்கும் நம்பிக்கை ஊட்டியிருக்கலாம். வடக்குக் கிழக்கில் தமிழர்கள் முன்னரும் அரசாங்கக் கட்சிகளுக்குவாக்களித்துள்ளார்கள். எனினும் தேசிய மக்கள் சக்திக்குமிகவும் அதிகளவில் வெளிப்படையாகஆதரவைக் காட்டிவாக்களித்துள்ளார்கள். ஜனாதிபதிஅனுராவின் நம்பிக்கையூட்டும் பேச்சும் பொதுமக்களுடன் சுலபமாக நெருக்கமாகும் அவருடைய இயல்பும் தமிழ் மக்களையும் கவர்ந்துள்ளதாகவே தெரிகிறது.

ஆனால், ஆட்சிக்குவந்ததும் பரவலான எதிர்பார்ப்புக்கு மாறாக அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதாரக் கொள்கையைமுற்றாகஏற்றுநடைமுறைப்படுத்தத் தொடங்கியது. இது உழைக்கும் மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. இந்தஅம்சம் இங்குஆராயப்படும் நூலின் உள்ளடக்கம் சார்ந்ததல்ல என்பதால் இது பற்றிமேலும் இந்தக் கட்டுரையில் பேசுவதைத் தவிர்ப்போம்.

தேசியஇனப் பிரச்சனையைப் பொறுத்தவரைசிங்கள பௌத்த இனத்துவமேலாதிக்கஅரசஉருவாக்கத்திற்குச் சாதகமானஅரசியல் போக்கையே ஜே.வி.பி கடைப்பிடித்துவந்துள்ளது. சமீபகாலங்களில் அந்த அமைப்பின் தலைவர்கள் பிரச்சாரமேடைகளில் இனவாதம் பேசாவிட்டாலும் தனபாலசிங்கம் சொல்வதுபோல் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வைப் பொறுத்தவரை அவர்கள் சிங்களப் பேரினவாதத்தின் கைதிகளே. மேலும் அவர் சொல்வதுபோல் இந்தப் பிரச்னைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்குகடந்தகாலங்களில் முன்னெடுக்கப்பட்டசகலமுயற்சிகளையும் கடுமையாக எதிர்த்தஒருகசப்பானவரலாற்றை ஜே.வி.பி கொண்டிருக்கிறது.

ஆயினும் தற்போது ஜனாதிபதியும் அரசாங்கங்கத் தலைவர்களும் இனவாதப் பேச்சைத் தவிர்த்துநாட்டின் எல்லா இனத்தவரும், மதத்தவரும் சமமான இலங்கையரே அதாவது சிறீலங்கர்களே எனும் கருத்தை பிரபலமாக்கி வருகிறார்கள். இது தாராள தனிமனித சமத்துவத்தின் அடிப்படையிலான குடியுரிமைக் கோட்பாடு சார்ந்த சுலோகம் போலவே கேட்கிறது.

இந்தப் பின்னணியிலேயே தற்போதுஅரசாங்கம் பேசும் 'புதியஅரசியல் கலாச்சாரம்', மற்றும் எதிர்பார்க்கப்படும் புதியஅரசியல் அமைப்பின் உள்ளடக்கங்கள் பற்றியகேள்விகள் எழுகின்றன.

புதிய அரசியல் அமைப்பு இப்போதிருக்கும் அரசியல் அமைப்பிலிருந்து எந்தவழிகளில் வித்தியாசமாக, முன்னேற்றகரமானதாக இருக்கப்போகிறதுஎனும் கேள்விஅடிப்படையானது. இது விவாதிக்கப்பட வேண்டிய பலஅம்சங்களைஅடக்கும் ஒரு பரந்தகேள்வி.

தனபாலசிங்கம் இரண்டுமுக்கிய விடயங்களை வலியுறுத்துகிறார். ஒன்று, ஜனாதிபதிஆட்சிமுறையின் ஒழிப்பு. மற்றதுநாட்டின் பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்கும் வகையில் தேசிய இனப்பிரச்சனைக்கு அதிகாரப் பகிர்வின் அடிப்படையிலான தீர்வு. இந்த இரண்டையும் உறுதியாகச் செயற்படுத்தக் கூடிய தலைவர்கள் இதுவரை இலங்கைக்குக் கிடைக்கவில்லை. அநுரதிசநாயக்க அந்தவரிசையில் தானும் இணையவிரும்பமாட்டார் என நம்புவோமாக எனப் பதிவிடுகிறார்.

இந்த இரண்டையும் செயற்படுத்தவேண்டிய பெரும்பான்மையைப் பாராளுமன்றத்தில் அரசாங்கம் கொண்டுள்ளது. அதேபோல் இரண்டையும் செயற்படுத்திவரலாறுபடைக்கும் அரசியல் உறுதிப்பாடு அரசாங்கத்திடம் இருக்கிறதா? எனும் பெரிய கேள்விக்குக் காலம் பதில் சொல்லும். ●

## முன்னாள் பாராளுமன்ற...

செப்டெம்பரில் நிறைவேற்றப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு தங்களுக்குள் கருத்தொருமித்துச் செயற்படமுடியாத அரசியல்வாதிகள் தங்களுக்கான வரப்பிரசாதங்களை அதிகரிப்பதற்கு பாராளுமன்றத்தில் ஒன்றுபட்டு சட்டங்களை நிறைவேற்றிய பல சந்தர்ப்பங்களை நாம் கண்டிருக்கிறோம். தவறான ஆட்சிமுறைக்கும் ஊழலுக்கும் எதிராக இலங்கையின் வரலாறு முன்னென்றும் கண்டிராத 2022 மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் அத்தகைய நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கு பெரும்பாலும் வாய்ப்பில்லை.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இல்லாமல் செய்யும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் திட்டம் தொடர்பில் கரு ஜெயசூரிய போன்ற தலைவர்கள் அரசாங்கத்திடம் முன்வைத்திருக்கும் கோரிக்கையை நாட்டு மக்கள் சாதகமான முறையில் நோக்க முடியாத அளவுக்கு இலங்கையின் அரசியல் வர்க்கம் ஊழல் நிறைந்ததாக இருந்து வந்திருக்கிறது. இதன் விளைவாக தவிர்க்க முடியாத வகையில் நேர்மையான அரசியல்வாதிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது உண்மை.

முன்னாள் பாராளுமன்ற செயலாளர் நாயகம் காலஞ்சென்ற சாம் விஜேசிங்க தனது இறுதிக்காலத்தில் ஆங்கிலப்பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கூறிய ஒரு கதையை இச்சந்தர்ப்பத்தில் நினைவுமீட்டுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

புதிதாக பாராளுமன்றத்துக்கு தெரிவானவர்களுக்கு பாராளுமன்ற நடைமுறைகள் குறித்து விளக்கமளிப்பதற்காக ஏற்பாடுசெய்யப்படும் பயிற்சிப் பட்டறைகளில் விரிவுரை நிகழ்த்துவதற்கு விஜேசிங்க அழைக்கப்படுவது வழமை. ஒரு பயிற்சிப் பட்டறையில் புதிய உறுப்பினர்களிடம் பாராளுமன்றத்துக்கு வந்த நோக்கம் குறித்து அவர் கேட்டபோது அவர்கள் எல்லோருமே மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதற்காகவே வந்திருப்பதாகாக கூறினார்களாம் . அப்போது விஜேசிங்க, 'இல்லை, நீங்கள் குறுகிய காலத்திறகுள் பணம் குவிப்பதற்காகவே பாராளுமன்றத்துக்கு வந்திருக்கிறீர்கள்" என்று நேரடியாகவே கூறிவிட்டாராம். ●

## நாட்டில் கோர விபத்துகள்: ஒரேநாளில் மூவர் மரணம்

கொழும்பு, பெப். 01

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்துக்களில் இளைஞன் ஒருவர் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாரம்மல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருநாகல் - நாரம்மல வீதியில் உயன்வத்த பகுதியில் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

குருநாகல் நோக்கிப் பயணித்த கார் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து எதிர் திசையில் பயணித்த லொறி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காரில் பயணித்த இரண்டு பெண்கள், இரண்டு ஆண்கள் மற்றும் இரண்டு சிறுவர்கள் காயமடைந்து நாரம்மல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக குருநாகல் மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

காரின் சாரதி தூங்கியதால் விபத்து ஏற்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, ஹெட்டிபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிலாபம் - குருநாகல் வீதியில் கல்கந்த பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

குருநாகல் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், எதிர்த்திசையில் வந்த மோட்டார்சைக்கிள் மீது மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இதன்போது, விபத்தில் காயமடைந்த இரண்டு மோட்டார் சைக்கிள் சாரதிகளும் மருத்தவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அதில் ஒருவர் உயிரிழந்தார்.

அதேநேரம், வலஸ்முல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலஸ்முல்ல - போவல வீதியில் ஹெனகெதர பகுதியில், இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

போவல நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டுவிலகி மின்கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் பயணி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, மோட்டார் சைக்கிள் சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

(எ)

## ஆரோக்கியம், அந்தஸ்தல்ல...

பள்ளிகளில் உணவு, உடல், மனம் குறித்து வழங்கப்படும் அறிவு பெரும்பாலும் மேற்பரப்பிலேயே நிற்கிறது. உணவு பிரமீடு, சத்துகள், உடல் அசைவு, மனநலன் ஆகியவை தேர்வு மதிப்பெண்களைத் தாண்டி வாழ்க்கைத் திறன்களாக கற்பிக்கப்பட வேண்டும். குழந்தைகள் எதைத் தவிர்க்க வேண்டும் என்பதைக் காட்டிலும், எதற்கு எது தேவை? என்பதைப் புரிந்துகொள்ளும் கல்வியே நீடித்த ஆரோக்கியத்தை உருவாக்கும்.

ஊடகங்கள் சமூக மன நிலையை வடிவமைக்கும் சக்தி கொண்டவை. ஆனால், அவை தொடர்ந்து ஒரே உடல் வடிவத்தை மட்டுமே அழகாகவும், வெற்றியின் அடையாளமாகவும் முன்னிறுத்தும்போது, உடல் வெறுப்பு சமூக நோயாக மாறுகிறது.

உணவு மற்றும் உடலை மாற்றும் விளம்பரங்கள், உடலை சரிசெய்ய வேண்டிய பொருளாக மாற்றுகின்றன. ஊடகங்கள் அழகை மறுவரையறை செய்யாமல், ஆரோக்கியத்தை மையமாகக் கொண்ட உரையாடலை உருவாக்காமல் இந்தச் சங்கிலி உடையாது.

வேலை இடங்கள் ஆரோக்கியத்தை அதிகம் புறக்கணிக்கும் இடங்களாக மாறியுள்ளன. நீண்ட நேர வேலை, இடைவெளியற்ற உணவு, உடல் அசைவு இல்லாத வாழ்க்கை, தொடர்ச்சியான மன அழுத்தம் இவை அனைத்தும் வேலை வாழ்க்கையின் இயல்பு என ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆனால், இந்த இயல்பு மனித உடலுக்கும் மனத்துக்கும் எதிரானது. வேலை இடங்களில் உணவு இடைவெளி, இயக்கத்துக்கான வாய்ப்பு, மனநல ஆதரவு ஆகியவை சலுகைகளாக அல்ல் அடிப்படைத் தேவைகளாகவே பார்க்கப்பட வேண்டும்.

அரசும் கொள்கை அமைப்புகளும் தனி நபரைக் குற்றம் சொல்லும் வழியை விட்டு விலக வேண்டும். சத்தான உணவு அனைவருக்கும் எளிதில் கிடைக்கிறதா? பாதுகாப்பான நடைபாதைகள் உள்ளனவா? மனநல சேவைகள் அணுகத் தக்கவையா? இந்தக் கேள்விகளுக்குப் பதில் இல்லாமல், ஆரோக்கியத்தை தனிநபரின் தோல்வியாக மாற்றுவது நியாயமல்ல.

உணவு, உடல் அசைவு, உள நலன் ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த மனித மரியாதையின் அடிப்படைகள். இவற்றில் ஒன்றை மட்டும் முன்னிலைப்படுத்தி மற்றவற்றை புறக்கணிக்கும் எந்த சமூகமும் முழுமையான ஆரோக்கியத்தை அடைய முடியாது. இன்று தெற்காசிய சமூகங்கள் எதிர்கொள்கிற பெரும்பாலான வாழ்க்கைமுறை நோய்களும், மன அழுத்தங்களும், உடல் வெறுப்பும், தனிநபரின் தோல்வியல்ல் அது சமூக மனநிலையின் பிரதிபலிப்பே.

ஐரோப்பிய சமூகங்கள் காட்டும் முக்கியப் பாடம் ஒன்றே. உணவு ஒரு காட்சிப் பொருளல்ல் அது உடல் பராமரிப்பின் ஒரு பகுதி. உடல் அசைவு தண்டனை அல்ல அது வாழ்வின் இயல்பு. உளநலன் அவமானம் அல்ல அது சுகாதார உரிமை. இந்த மூன்றையும் இணைத்துப் பார்க்கும் போது, ஆரோக்கியம் தனிநபரின் சுமையாக அல்ல் சமூகத்தின் பொறுப்பாக மாறுகிறது.

மாற்றம் பெரிய புரட்சியாக இருக்க வேண்டியதில்லை. அது குடும்ப உணவு மேஜையில் தொடங்கலாம். பள்ளி வகுப்பறைகளில் வளரலாம். ஊடக உரையாடல்களில் வலுப்பெறலாம். வேலை இடங்களிலும் கொள்கைகளிலும் உறுதியாகலாம். ஆனால் அந்த மாற்றத்தின் அடிப்படை ஒன்றுதான். உணவை உணவாகவும், உடலை மனிதனாகவும், மனத்தை ஓர் உறுப்பாகவும் பார்க்கத் தொடங்குதல்.

இறுதியாக, ஓர் உண்மை மட்டும் தெளிவாகச் சொல்லப்பட வேண்டும். ஆரோக்கியம் அந்தஸ்து அல்ல அழகு போட்டி அல்ல் சமூக ஒப்பீட்டு அளவுகோலும் அல்ல. அது மனித மரியாதையின் அடிப்படை. உணவு, உடல், மனம் - இந்த மூன்றையும் ஒரே நேரத்தில் மதிக்கும் சமூகமே உண்மையில் முன்னேறிய சமூகமாகும்.

(தினமணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருந்தலைவர்...

வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், தமிழ்நாட்டின் முன்னாள் அமைச்சர் ந.நல்லுசாமி, யாழ். இந்தியத் துணைத் தூதர் சாய் முரளி, பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், ஞானமுத்து சிறிநேசன்,கவீந்திரன் கோடீஸ்வரன், பத்மநாதன் சத்தியலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, மறுவன் புலவு சச்சிதானந்தம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், மாவை சேனாதிராசாவின் குடும்பத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

## முல்லைத்தீவில்...

நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கடற்பகுதியில் இது ஏற்பட்டிருந்தாலும், அதற்கு அருகிலுள்ள நிலப்பரப்பில் வசிக்கும் மக்களும் இந்த நில அதிர்வை உணர்ந்துள்ளதாகவும் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அத்துடன், இதனால் எவ்வித பாதிப்புகளும் ஏற்படாது என்றும் இந்த நில அதிர்வினால் சுனாமி அச்சுறுத்தல் ஏற்படாது என்றும் திருகோணமலை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார். (அ)

## அரசியல் கைதிகளின்...

மு.கோமகன் தலைமையில் இந்த போராட்டம் நடைபெற்றது.

இதேபோன்ற ஒரு நாளில் **(1996.01.31)** கைது செய்யப்பட்டு சிறையில் வாடும் அரசியல் கைதியின் 31ஆவது ஆண்டை நினைவுகூரும் முகமாக இந்த நூதனப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது, அவர்களது சிறைவாச ஆண்டுகளை வெளிப்படுத்தும் வகையில் காட்சி சித்தரிக்கப்பட்டு, அவர்களது வாழ்க்கை மெழுகுவர்த்திபோல தேய்வடைந்து செய்கின்றது என்ற விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

இதில் அரசியல் கைதிகளின் உறவுகள் வேலன் சுவாமிகள், அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம், காணாமல் ஆக்கப்பட்டோரது சங்கத்தினர், சட்டத் தரணிகள், சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், தமிழ் தேசியவாதிகள், பல்கலைக் கழக மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ-05)

## பதவி ஆசையற்றவர்...

கொண்டு உரை யாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாவை. சேனாதிராசாவை எனக்கு எனது 10 வயதிலிருந்தே தெரியும். அவர் எனது தந்தையாரை சந்திப்பதற்காக அடிக்கடி எமது வீட்டுக்கு வருவார். நாங்கள் உயர்தரம் படித் துக் கொண்டிருந்த காலத் தில், எங்களைப் போன்ற இளையோருக்கு அரசி யல் வகுப்புகளை நடத்திய ஆசானாகவும் அவர் திகழ்ந்தார். நான் பிரதேச செயலாளராகவும் பின்னர் மாவட்ட செயலாளராகவும் பணியாற்றிய காலங்களில் அவர் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தார். அதிகாரத்தில் இருந்தாலும் அவர் மிகவும் எளிமையானவராகவே வாழ்ந்தார். அவரை எந்த நேரத்திலும் எவரும் இலகுவாகச் சந்திக்க முடியும் என்ற நிலை இருந்தது. அவர் பதவி ஆசை இல்லாதவர். சலுகைகளுக்கு ஒருபோதும் விலைபோகாதவர் தனக்காகவோ, தன் குடும்பத்துக்காகவோ எந்தவொரு சலுகையையும் அவர் எதிர்பார்த்ததில்லை. இன்றைய அரசியல் சூழலில் அவர் மிக வித்தியாசமான ஒரு மனிதராகவே வாழ்ந்து மறைந்துள்ளார்.

அவர் ஓர் அப்பாவியான மனிதர். அவரிடம் உதவி கேட்டு வரும் யாருக்கும் ‘மாட்டேன்’ என்று சொல்லும் துணிவு அவருக்கு இருந்ததில்லை. அவரிடமிருந்து எப்போதும் எதிர்மறையான பதில்கள் வராது. அந்தளவுக்கு அவர் மென்மையான உள்ளம் கொண்டவர். தமிழ் மக்களின் உரிமைகளுக்காகத் தனது இளமைக் காலத்தைத் தியாகம் செய்து, பல வருடங்கள் சிறையில் வாடியவர். இத்தகையதொரு சிறந்த தலைவரை இழந்தமை எமது சமூகத்துக்குப் பேரிழப்பாகும்-என்றார்.

மாவை.சோ.சேனாதிராவின் முதலாமாண்டு நினைவு மலரும், பேராசிரியர் பஞ்.இராமலிங்கம் எழுதிய ஈழ அண்ணல் மாவை.சோ.சேனாதிராசா என்னும் நூலுமாக இரண்டு நூல்கள் இதன்போது வெளியிட்டு வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழக முன்னாள் அமைச்சர் ந.நல்லுசாமி, யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் துணைத் தூதுவர் சாய்முரளி, பாரா ளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மதத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், தமிழகம் மற்றும் புலம்பெயர் தேசங்களிலிருந்தும் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (அ)

# 117 ஆமை முட்டைகளுடன் திருமலையில் ஒருவர் கைது

திருகோணமலை, பெப். 01

சட்டவிரோதமான முறையில் 117 ஆமை முட்டைகளை தன்வசம் வைத்திருந்த ஒருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படையினரால் திருகோணமலை, கல்லடிச் சேனை கடற்கரை பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்தேகநபர் சட்டவிரோதமான முறையில் இந்த 117 முட்டைகளையும் கொண்டு சென்றுகொண்டிருந்த போதே கடற்படையினரால் பிடிக்கப்பட்டார்.

இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டவர் திருகோணமலை, தோப்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரையும் ஆமை முட்டைகளையும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சேருநுவர வனஜீவிகள் அலுவலகத்தில் ஒப்படைக்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)

## சிஸ்டத்தை குழப்பிவிட்டது...

சிறப்புரையாற்றுவதற்கு அழைக்கப்பட்டிருந்தேன். நானும், எமது கட்சி பிரமுகர்களும் சென்றிருந்தோம்.

இது அரசாங்கத்துக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது இறுதியானது அல்ல, இன்னும் பல நிகழ்வுகளுக்கு எதிர்காலத்தில் செல்லவுள்ளேன்.

மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இந்த அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது. இருக்கின்ற சிஸ்டத்தையும் குழப்பி வருகின்றனர்.

ஜனவரி மாதம் என்னை சிறையில் அடைப்பார்கள் என முன்னர் எச்சரித்திருந்தனர். இதற்காகக்கூட நான் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருக்கலாம்.” - எனவும் நாமல் குறிப்பிட்டார். (அ)

## கணக்காய்வாளர்...

தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

கணக்காய்வாளர் நாயகம் பதவி தொடர்பாக அரசியலமைப்பு சபை கூடி கலந்துரையாடியது. ஜனாதிபதி புதிய பெயர் ஒன்றை அனுப்பியுள்ளார். அதனை முறையாக ஆய்வு செய்ய உறுப்பினர்களுக்குச் சற்றே கால அவகாசம் தேவைப்படுகிறது. எனவே, பாராளுமன்றம் கூடும் நாளான எதிர்வரும் 3ஆம் திகதி இது குறித்த இறுதி முடிவை எடுப்போம்.”என தெரிவித்தார்.

கணக்காய்வாளர் நாயகம் பதவிக்காக ஜனாதிபதியினால் ஐந்தாவது முறையாக ஒருவரது பெயர் அரசியலமைப்பு சபைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நேற்று கூடி இறுதி முடிவெடுக்கத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், உறுப்பினர்கள் அந்தப் பரிந்துரையை ஆய்வு செய்ய அவகாசம் தேவைப்பட்டதால், இறுதித் தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## அரச வைத்தியர்கள்...

உரிய மற்றும் திருப்திகரமான தீர்வுகள் வழங்கப்படாததால், போராட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அவசர செயற்குழு கூட்டம் நேற்று காலை நடைபெற்றது.

இதன்படி, பெப்ரவரி 02ஆம் திகதி காலை 8.00 மணி முதல் அமலுக்கு வரும் நடவடிக்கைகள் பின்வருமாறு:-

வைத்தியசாலைகளில் கையிருப்பில் இல்லாத மருந்துகள் மற்றும் உபகரணங்களை வெளியில் இருந்து பெற்றுக்கொள்ளுமாறு நோயாளிகளுக்கு பரிந்துரைத்து மருந்துச் சீட்டுகள் வழங்குவது நிறுத்தப்படும். வைத்தியசாலைகளில் மேற்கொள்ள இயலாத ஆய்வகப் பரிசோதனைகளை வெளியக ஆய்வகங்களில் மேற்கொள்ளுமாறு பரிந்துரைப்பதும் இடைநிறுத்தப்படும்.

அரசியல் அமைப்புகள் அல்லது குழுக்களால் ஏற்பாடு செய்யப்படும் சுகாதார முகாம்கள் மற்றும் கிளினிக்குகளில் வைத்தியர்கள் தன்னார்வமாக பங்கேற்பது தவிர்க்கப்படும்.

போதிய வைத்தியர்கள் இல்லாத சூழலில், புதிதாகத் திறக்கப்படும் விடுதிகள் அல்லது பிரிவுகளுக்கு வைத்தியர்களை இணைப்பது நிறுத்தப்படும். நோயாளிகளின் பாதுகாப்பு, தனியுரிமை மற்றும் போதுமான பணியாளர் வசதிகள் இல்லாத சூழலில் நோயாளிகளைப் பரிசோதிப்பதில் இருந்து வைத்தியர்கள் விலகுவார்கள்.

விசேட வைத்திய நிபுணர்கள் தாம் நியமிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகளில் மட்டுமே சேவையாற்றுவார்கள். விசேட நிபுணர்கள் இல்லாத பிற வைத்தியசாலைகளில் மேலதிக கடமைகளை மேற்கொள்வது நிறுத்தப்படும். இவ்வாறான கடுமையான நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அமல்படுத்தப்படவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

# வெளிநாட்டு துப்பாக்கியுடன் 24 வயது இளைஞன் கைது

கொழும்பு, பெப். 01

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட, தொடர் இலக்கம் அழிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் இரண்டு தோட்டாக்களுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தை சேர்ந்த 24 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## தையிட்டியில்...

மணிக்கு நிறைவடைந்து மீண்டும் இன்று காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

நேற்றைய போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், சட்டத்தரணி க.சுகாஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

## புதிதாக 10 பெய்லி...

பக்கத்தில் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த பாலங்கள் இந்தியா இலங்கைக்கு வழங்க முன்வந்துள்ள 450 மில்லியன் டொலர் பொருளாதாரப் பொதியின் ஒரு அங்கமாகும் என அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பாலங்கள் இலங்கைக்கு வந்தடைந்ததும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் போக்குவரத்து வசதிகளை உடனடியாகச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## சீனா - இலங்கை...

நிலையத்தை வந்தடைந்தது.

இரு நாடுகளுக்கும் இடையிலான புதிய விமானத் தொடர்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த கன்னிப் பயணத்திற்காக ஏ-330 எயார்பஸ் ரக விமானம் பயன்படுத்தப்பட்டது. இவ்விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தபோது, பாரம்பரிய முறைப்படி நீர்த்தாரை மரியாதை வழங்கப்பட்டு உற்சாகமாக வரவேற்கப்பட்டது.

நேற்று பிற்பகல் 01.46 அளவில், சீனாவிலிருந்து ஜே.டி.-487 என்ற இலக்கத்தைக் கொண்ட விமானம் கட்டுநாயக்கவை வந்தடைந்தது.இதில் 170 பயணிகள் மற்றும் 13 ஊழியர்கள் பயணித்திருந்தனர்.

இனிவரும் காலங்களில், இந்த விமான சேவை வாரத்திற்கு இரு முறை செவ்வாய், சனிக்கிழமைகளில் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சிரேஷ்ட பொலிஸ்...

ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சிப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். பிரதிப் பொலிஸ் மா அதிபர் எச்.சி.ஏ. புஷ்பகுமார காலி பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரி.எச்.ஈ.எல். பெரேரா கம்பளை பிரிவிலிருந்து கொழும்பு வடக்கு பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.என். குணவர்தன மொனராகலைப் பிரிவிலிருந்து பொலிஸ் தலைமையகத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.ஏ.ஆர். புஷ்பகுமார கொழும்பு வடக்கு பிரிவிலிருந்து விசேட விமான நிலையப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.ஏ. உதய குமார வலான ஊழல் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பதவியிலிருந்து களுத்துறைப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியாக மாற்றப்பட்டுள்ளார்.

அத்துடன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.எம்.எஸ்.பி. விக்ரமசிங்க பொலிஸ் தலைமையகத்தின் மேலதிக தலைமையக நிர்வாகப் பணிப்பாளராக இருந்து, மொனராகலைப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் கண்டி பொலிஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றிய பி.டி. இலங்கக்கோன் கம்பளை பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வலி.கிழக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் அமளிதுமளி

யாழ்ப்பாணம், பெப். 01

வலி.கிழக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வின் போது திவுல் ஓயா திட்டம் தொடர்பான பிரேரணையால் அமளிதுமளி ஏற்பட்டது.

அரசாங்கத்தினால் அதிகளவிலான நிதி ஒதுக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்கள குடியேற்றமான திவுல் ஓயா திட்டத்தை எதிர்க்கும் வகையிலான பிரேரணை ஒன்றை வலி.கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் சபையின் ஒப்புதலுக்காக கொண்டு வந்தார்.

இதன்போது ஆளும் கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்கு இடையில் பலத்த வாக்குவாதம் இடம்பெற்றது.

மகாவலி திட்டம், வெலி ஓயா திட்டம் போன்று திட்டமிட்டு தமிழ் மக்களின் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் திட்டமாகவே கிவுல் ஓயா திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது என சபையில் சுட்டி காட்டிய தவிசாளர்,

கிவுல் ஓயா திட்டத்திற்கு எதிரான பிரேரணையை சமர்ப்பித்தார்.

இதனை தேசிய மக்கள் கட்சியின் 9 பிரதேச சபை உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். ஏனைய தமிழ் கட்சிகள் அனைத்தும் குறித்த திட்டம் தமிழ் மக்களுக்கு விரோதமானது என்ற வகையில் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தனர். (அ)

# தொல்பொருள் அகழ்வில் ஈடுபட்ட ஐந்து பேர் கைது

கொழும்பு, பெப். 01

பழங்காலப் பொருட்களை பெறும் நோக்கில் சட்ட விரோதமாக அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் 5 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். தமன பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 20 மற்றும் 71 வயதுக்கு இடைப்பட்ட அம்பாறை, மினுவாங்கொடை, பூகொட மற்றும் கொடதெனியாய ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தமன பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# இலங்கையின் எரிசக்தித்துறையில் கவனம் செலுத்துகிறது அமெரிக்கா

## அமெரிக்க பதில் தூதர் அறிவிப்பு

கொழும்பு, பெப். 01

இலங்கையின் எரிசக்தி துறையில் நிகழும் நேர்மறையான மாற்றங்களில் தனது நாடு கவனம் செலுத்தியுள்ளதாக பதில் அமெரிக்க தூதர் ஜெய்ன் ஹோவெல் தெரிவித்துள்ளார்.

மேலும், புதிய முதலீட்டு வாய்ப்புகள் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான எரிசக்தி துறை உறவுகளை மேலும் மேம்படுத்த விரும்புவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடியுடனான சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எரிசக்தி அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போது, நாட்டில் எரிசக்தி மற்றும் மின் துறைகளில் ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்கள் மற்றும்

முன்னேற்றங்கள் குறித்து எரிசக்தி அமைச்சர் விரிவாகப் பேசியிருந்தார். அத்துடன், அமெரிக்க முதலீடு மற்றும் தொழில்நுட்ப உதவியைப் பெறும் என

எதிர்பார்க்கப்படும் துறைகள் மற்றும் உருவாகி வரும் புதிய வாய்ப்புகள் குறித்து அவர் விளக்கமளித்தார்.

மின் மறுசீரமைப்பு திட்டம், பெற்றோலியத் துறையில் நடைபெற்று வரும் மாற்றங்கள் மற்றும் நாட்டிலும் பிராந்தியத்திலும் எரிசக்தி ஸ்திரத்தன்மை

தொடர்பான பிரச்னைகள் குறித்தும் இதன்போது விவாதிக்கப்பட்டது. அமெரிக்க தூதரகத்தின் பொருளாதார விவகார அதிகாரி ஜேக்கப் தோமஸ் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜனக ராஜகருணா ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

# நிதி பற்றாக்குறையால் தத்தளிக்கின்றது ஐ.நா.

## பொதுச் செயலாளர் தகவல்

நியூயோர்க், பெப். 01

உறுப்பு நாடுகள் தமது சந்தாப் பணத்தைச் செலுத்தத் தவறியதால், ஐக்கிய நாடுகள் சபை "உடனடி நிதிச் சரிவை" எதிர்நோக்கியுள்ளதாக அதன் பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிதி நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதாகவும், எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் பணம் முழுமையாகத் தீர்ந்துவிடும் அபாயம் உள்ளதாகவும் குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

193 உறுப்பு நாடுகளுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், நாடுகள் தமது கட்டாயக் கொடுப்பனவுகளை உடனடியாகச் செலுத்த வேண்டும் அல்லது அமைப்பின் நிதி விதிகளில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா.வின் மிகப்பெரிய நிதிப் பங்களிப்பாளரான அமெரிக்கா, தனது வழக்கமான மற்றும் அமைதி காக்கும் பணிகளுக்கான நிதியை வழங்க மறுத்துள்ளது. டொனால்ட் ட்ரம்ப் ஐ.நா.வின் பல முகவர் நிலையங்கள் வரிப்பணத்தை வீணடிப்பதாகக் கூறி, அவற்றிலிருந்து அமெரிக்காவை வெளியேற்றியுள்ளார்.

2025 ஆம் ஆண்டிற்கான வழக்கமான பாதீட்டுக்கு அமெரிக்கா எவ்வித நிதியையும் வழங்கவில்லை. அமைதி காக்கும் பணிகளுக்காக வழங்கப்படவேண்டிய தொகையில் 30 வீதத்தை மாத்திரமே வழங்கியுள்ளது. இந்த ஜனவரி மாதம், அமெரிக்க முன்னுரிமைகளுக்குப் பதிலாக உலகளாவிய நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுப்பதாகக் கூறி, 31 ஐ.நா. முகவர் நிலையங்கள் உட்பட 66 சர்வதேச அமைப்புகளிலிருந்து அமெரிக்கா வெளியேறியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், நிதிப் பற்றாக்குறையினால் ஐ.நா. அலுவலகங்களில் மின்சாரத்தைச் சேமிக்க மின்-படிக்கட்டுகள் அடிக்கடி அணைத்தல், குளிர்காலத்திலும் வெப்பமூட்டும் வசதிகள் குறைத்தல் போன்ற கடும் சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்தோடு, நிதி நெருக்கடியால் உலகம் முழுவதும் ஐ.நா. முன்னெடுத்து வரும் மனிதாபிமானப் பணிகள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நிதி இல்லாததால், போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணைகளை முன்னெடுக்கமுடியாமல் மனித உரிமைகள் அலுவலகம் திணறி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# நாமலுக்கும் ஷிரந்திக்கும் சி.ஐ.டி அழைப்பு

கொழும்பு, பெப். 01

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷவுக்கும் அவரது மகனும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவுக்கும் பெப்ரவரி 3 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் "சிறிலிய" என்ற பெயரில் பயன்படுத்தி வங்கி கணக்கு தொடர்பில் பொலிஸ் நிதி குற்றவியல் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக ஷிரந்தி ராஜபக்ஷவுக்கு ஜனவரி 27 ஆம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அழைக்கப்பட்டிருந்தார்.

ஆனால், தனிப்பட்ட விடயம் காரணமாக ஷிரந்தி ராஜபக்ஷ ஜனவரி 27 ஆம் அன்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாவில்லை.

இதனால் பெப்ரவரி 3 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு ஷிரந்தி ராஜ பக்ஷவுக்கும் நாமல் ராஜபக்ஷவுக் கும் மீண்டும் அழைப்பு விடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 2024 சாதாரண தர பரீட்சையின்போது 14 தமிழ் மாணவர்களின் உரிமை மீறல்!

## புள்ளி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரை

கொழும்பு, பெப். 01

2024ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின்போது, 14 தமிழ் மொழிமூல மாணவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக தீர்ப்பளித்துள்ளது.

2024ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி மினுவாங்கொடை அல்- அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் புவியியல் பரீட்சைக்குத் தோற்றிய 14 மாணவர்களுக்கு, புவியியல் பகுதி ஒன்று வினாத்தாள் மற்றும் அதற்குத் தேவையான வரைபடங்கள் வழங்கப்படவில்லை.

இதனால் மாணவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் முறையிட்டிருந்தார். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன் னெடுத்த விசாரணைகளுக்கு அமைய, பரீட்சை மேற்பார்வையாளர் அல் போன்சோ வினாத்தாள் பொதிகளைச் சரியாகச் சரி பார்க்கத் தவறியதுடன், கவனக்குறைவாகச் செயற்பட்டமையும் தெரிய வந்துள்ளது.

அத்துடன், மேற்பார்வையாளர் அல்போன்சோவுக்குத் தமிழ் பேசவோ அல்லது புரிந்துகொள்ளவோ முடியாது என்பது விசாரணையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள "சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் சமமான பாதுகாப்பு" என்ற அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனவே, பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வினாத்தாள் கிடைக்காததால் இழந்த 50 புள்ளிகளுக்குப் பதிலாக, மாணவர்கள் புவியியல் பகுதி இரண்டில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சம்பந்தப்பட்ட மேற்பார்வையாளர் இனிவரும் காலங்களில் பரீட்சை மேற்பார்வை பணிகளில் ஈடுபடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் பரீட்சை மேற்பார்வைக்கு நியமிக்கப்படுவார்கள், மாணவர்கள் பேசும் மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பதை உறுதி செய்ய ஒரு முறையான பொறிமுறையை பரீட்சைத் திணைக்களம் உருவாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இது போன்ற தவறுகள் நடக்காமல் இருக்க மாணவர்களுக்கான அறிவுறுத்தல் ஆவணங்கள் மாணவர்களின் தாய் மொழிகளிலேயே வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மாணவிமீது வன்புணர்வு இலங்கையர் இஸ்ரேலில் கைது

கொழும்பு, பெப். 01

இஸ்ரேலில் உள்ள விசேட தேவையுடையோர் பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவி ஒருவரை பாலியல் வன்புணர்வு செய்த குற்றச்சாட்டின் கீழ் இலங்கை பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதை இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

2025 மே மாதம் தொழில் நிமித்தம் இஸ்ரேலுக்கு வருகை தந்ததாகக் கூறப்படும் குறித்த சந்தேக நபர், தனது உத்தியோகபூர்வ வேலைத் துறைக்கு அப்பால் தற்காலிக பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளார். இன்டர்போலின் இஸ்ரேலிய கிளையிடமிருந்து தூதரகத்திற்கு கிடைத்த தகவலின்படி, அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதுடன், மேலதிக விசாரணை களுக்காக தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விசேட தேவையுடைய சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்த ஒரு வழக்காக இஸ்ரேலிய அதிகாரிகள் இதனை விசாரித்து வருவதாக தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், குற்றவியல் மற்றும் சமூக நடத்தை குறித்த இஸ்ரேலின் கடுமையான சட்டங்களை மீண்டும் வலியுறுத்தியுள்ளதுடன், இவ்வாறான பாரதூரமான குற்றங்கள் வெளிநாட்டு பிரஜைகளுக்கு நீண்டகால சிறைத் தண்டனை மற்றும் நாடு கடத்தப்படுவதற்கு வழிவகுக்கும் எனவும் எச்சரித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org